egistered No. M. 2330 ‘SIDDHANTHAM’
ACC-NO-33112 Vol. 24—No. 4

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

‘தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே’

லர் 24 | கர சித்திரை 1951 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்
40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை-6

சைவ சித்தாந்த மகாசமாஜ கோடை வகுப்பு

இவ்வாண்டு 16 - 5 - 51 முதல் 27 - 5 - 51 வரை காரைக்குடிக்குச் சமீபமுள்ள சாக்கோட்டை என்னும் ஊரில் நடைபெறும். வழக்கம்போல் உணவு வசதி வேண்டுவோர் ரூ. 15 முன்பணம் கட்டவேண்டும். திருப்புத்தூர், பிரான்மலை (திருக்கொடுங்குன்றம்), குன்றக்குடி முதலிய ஊர்களுக்குப் போக ஏற்பாடு செய்யப்படும்.

அறிக்கை

27, 28, 29-4-51. இலங்கை யாழ்ப்பாணத்தில் தமிழ்த் திருவிழா நடைபெறப்போகிறது. தமிழன்பர்கள் பங்கு எடுத்துக் கொள்ளுவார்களாக.

* * * * *

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 67-ம் ஆண்டு விழா 12, 13 - 5 - 51 நாட்களில் ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் ஆணையாளர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

செய்தித் திரட்டு

6 - 3 - 51. அன்று கோட்டையூர் திருமந்திர வழிபாட்டுக் குழுவினரால் சிவராத்திரி நாள் கொண்டாடப் பட்டது. திருவண்ணாமலை ஆதீன ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகள் தலைமையில் திரு. கா. இராமநாதஞ் செட்டியார், வித்வான் அ. நடேச முதலியார், கொத்தமங்கலம் சதாசிவ அய்யா முதலியோர் பேசினர்.

* * * * *

10 - 3 - 51. மாலை 7 மணிக்குப் பூவாளூர் சிவன் கோவிலில் திருமுருக. கிருபானந்தவாரி அவர்களால் கந்த புராண சொற்பொழிவு நடந்தது.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 24 | கர சித்திரை 1951 ஏப்ரல் | இதழ் 4

திருக்குறளில் சில அரிய கருத்துக்கள்

(புரிசையார் பேச்சை ஒட்டி எழுதியது.)

திருக்குறள் உலகிலேயே சிறந்த நூல்களில் ஒன்று. அதில் அடங்கிக் கிடக்கும் அரிய கருத்துக்கள் கணக் கற்றவை. எந்த வகையில் ஆராய்ந்தாலும் புதுப் புதுக் கருத்துக்கள் அதில் தோன்றும். அதிகார வரிசையைப் பாருங்கள். அதிலே ஒரு ஒப்பற்ற அமைதி இருக்கிறது. ஒரு இடத்தில் ஒரு அதிகாரம் வைக்கப்பட்டிருந்தால் அது என் அங்கே வைக்கப்பட்டது என்பதற்கு நிரம்பக் காரணங்கள் காட்டலாம். உரையாசிரியர்கள் இந்த முறையில் பல காரணங்களை அடுக்கடுக்காக எடுத் துக் கூறுகின்றனர். அதிகாரம் மட்டும் அல்ல. ஒரு குறளை என் ஒன்றுக்கு முன்னும் மற்றொன்றுக்குப் பின்னும் வைக்கப்பட்டது என்பதற்கும் காரணங்கள் கூறு வர். இந்த முறையில் உரையாசிரியர்கள் பலதிறப்படுவர். ஒருவர் சொன்னதை மற்றொருவர் மறுப்பதும் உண்டு. இத்தனை வேறுபாடுகளுக்கும் காரணக் கற்பனைகளுக்கும் திருக்குறள் இடங்கொடுக்கிறது. ஆகவே அது அத்தனை நுட்பம் கொண்ட நூல் என்க.

இந்த வைப்பு முறைகளைக் குறித்துப் பல கதைகளும் கட்டி விடுகின்றனர். ஒருவர் சொன்னார் :—திருவள்ளுவரை ஒரு அறிஞர் கேட்டாராம். "உலகில் பெரியவர் யார்" என்றது அக்கேள்வி. அதற்கு அவர் நான் சொல்லுகிறன் பொறுத்துக் கேட்டுக்கொண்டிருங்கள் என்று தன் நூலை பாடத்தொடங்கினாராம். இல்லறம் துறவறம் இரண்டும் கூறி அறத்துப்பால் முடித்தார். அவைகளில் கண்ட மக்கள் பெரியவர்கள் அல்ல என்று ஊகிக்கப்பட்டது. பிறகு பொருட்பாலில் அரசும் அமைச்சும் கூறப்பட்டன. அவர்களும் பெரியவர்கள் அல்லர் எனப்பட்டது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக 95 அதிகாரங்கள் சென்றன. பிறகு 97-ல் குடிமை என்பது விவரிக்கப்பட்டது. 'நற்குடியிற் பிறந்தார்களே உயர்ந்தவர்கள்' என்று கூறப்பட்டது. ஆகவே உயர்வின் சின்னம் அங்கு தொடங்கியது. பிறகு 97ல் மானம் என்பதைக் கூறினர். மானமுடையவன் பெருங்குடியில் உதித்தவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று காட்டப்பட்டது. பிறகு 98-ல் 'பெருமை' கூறப்பட்டது. பெரியாரது தன்மை சொன்னதும் அவர்கள் மானம் உடையார்களினும் சிறந்தவர்கள் என்று அறியப்பட்டது. பிறகு 99 ல் சான்றாண்மை கூறப்பட்டது. சான்றோர்கள் பெரியோர்களினும் உயர்ந்தவர்கள் எனப்பட்டது. பிறகு 100 ல் பண்புடைமை கூறப்பட்டது. பண்புடையோர் சான்றோர்களினும் சிறந்தவர் என அறிவிக்கப்பட்டது. ஆகவே இந்த ஐந்துவகை மக்களினும் பண்பாடு உடையோரே உலகத்தில் மிக உயர்ந்தோர்கள் என்பது திருக்குறளின் கருத்து எனத் தெளிவுபடுத்தப்பட்டது. இந்தக் கருத்தை ஒவ்வொரு குறளாக எடுத்துக் கூறினும் வெகு செவ்வையாகத் தெரியவரும்.

இனி அதிகார வைப்பு ஒன்று மட்டுமல்ல. தனிக் குறள்களின் வைப்பும் அப்படியே. அவற்றின் வரிசை மட்டும் அல்ல. வெவ்வேறு குறள்களைப் பொறுக்கி எடுத்து ஆராய்ச்சி முறையில் சேர்த்தாலும் அங்கே ஒற்றுமையும் சோபான முறையும் காணலாம்.

உலகினர்க்கு உதவி புரியும் செயலில் பல வகைகள் உண்டு. அவைகளில் ஒன்றன்மேல் ஒன்றாகப் பலவற்றை உவமைகளுடன் கூறி எவ்வாறு ஒவ்வொன்றும் படிப்படியாகச் சிறந்தது என்று 'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்தில் வைத்துக் கூறுகிறார். ஒப்புரவறிதல் என்ற தலைப்பின் பொருள் உலகநடை அறிந்து செய்தல் என்று உரையாசிரியர் கூறுகின்றனர். நீதி நூல்களில் கூறியிருப்பினவற்றை ஓதி அவைகளைப் பற்றி நடப்பது மட்டும் அன்றி ஏனையவற்றை உலக நடையை அறிந்து பின் பற்றி நடத்தலாகும். உலக நடையை அறிதற்கு உலகில் காணும் உவமைப் பொருள்களே ஆதாரம் ஆகும். அவ்வித உவமைகள் மூன்றை வெகு அருமையாக ஆசிரியர் வள்ளுவர் எடுத்தாளுகிறார். அவைகளை விவரிப்போம். ஊர் நடுவிலே இருக்கும் குளம் ஊரார் குடிப்பதற்காக உள்ளது. அது வற்றியிருப்பதும் உண்டு. நீர் நிறைந்திருப்பதும் உண்டு. நீர் நிறைந்திருக்கையில் ஊராருக்கு மிகுதியும் பயன் உண்டு. அதுபோலவே உலக நடையைத் தழுவும் ஒரு அறிவுடையவனுடைய செல்வம் உலகத்தார்க்குப் பயன்படும் என்றார்.

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்ற குறளால் ஓதுகிறார்.

குளம் ஒரு அஃறிணைப் பொருள். அதில்நீர் நின்றதால் பயன் உண்டு. வற்றினால் இல்லை. அதுபோல ஒரு செல்

வன் இடத்தில் இருக்கும் செல்வம் இருக்கும் மட்டும் மக்களுக்கு பயன் உண்டு. இல்லாவிடில் இல்லே. குளத்திற்கு மக்கள் சென்று நீர் மொள்ள வேண்டுமே ஒழிய, குளம் மக்களிடம் சென்று நீர் தாராது வறியார் செல்வனிடம் சென்றுதான் உதவி பெறுவர். செல்வர் வறியவரிடம் சென்று உதவி செய்யமாட்டார்கள்.

ஆனல் ஒரு ஊர் நடுவிலே ஒரு பழமரம் இருந்தால் அம்மரம் பழுத்தால் அப்பழம் எடுக்க எல்லா மக்களும் வருவார்கள். மாமும் பழத்தை எடுத்துக்கொள் என்று கீழே அவற்றைத் தொங்கவிடும். மரமோ ஓரறி உயிர். குளம் போல் உயிரல்லாதது அல்ல. மரத்தின் பயன் குளத்தை விட ஒருபடி உயர்ந்தது. இதனை வள்ளுவர் அடுத்த குறளில்,

" பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின் "

என்றார். அம்மரமும் ஊர் நடுவிலே பழுத்தால் மிகவும் பயன் தரும். ஊரார் எல்லாருக்கும் பலன் கிடைக்கும். பலனும் வெகு எளிதில் மரம் தரும் என்று அறியவேண்டும். குளம் அப்படி எளிதில் தராது என்று வேற்றுமை காட்டினர்.

மரமோ பழுக்கும் காலத்தில் மட்டும் அதனை அண்டும் மக்களுக்கு உதவி புரியும். ஆனல் மருந்தோ மனிதனுடைய பசியை மட்டும் அன்று அவனுக்கு வரும் நோயையும் தீர்க்கும். அம்மருந்தும் ஒரு மரத்தின் வேரில் இருக்கும். அதனை எடுக்க மண்ணைத் தோண்டி வேரை வெட்டி எடுக்க வேண்டும். அந்த வேரைச் செதுக்கி எடுக்கையில் அம்மரம் பட்டுப் போனாலும் போகும். ஆனல் அதுவோ பிணி தீர்க்கத்தப்பாது. தன் உயிர் போனாலும் பிறர் பிணியைத் தீர்ப்பது அந்த மரம். இதனல் அம்மருந்து மரம் உதவி செய்வதிலும் மிக மேன்மையது அல்லவா. இதனை வள்ளுவர்,

" மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின் "

என்று கூறுகிறார். அப்படிப்பட்ட உதவி செய்பவன் பெருந்தகையான் என்று கூறப்பட்டான். அவன் தன் செல்வம் போனாலும் பிறர் வறுமை என்ற நோயைத் தீர்ப்பான் என்கிறார். ஆகவே அந்த வண்ணம் உதவி செய்தலே மிகச் சிறந்தவை.

"யாக்கை நிலையாமை"யைக் குறித்து மற்றொரு அரிய வேற்றுமைக் கருத்து திருக்குறள் ஒன்றைப் பற்றி உள்ளது.

" குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு "

என்ற குறளுக்குப் பரிமேலழகர் ஒருவிதமாகவும் மணக்குடவர் வேறுவிதமாகவும் உரை கூறுகின்றார்கள். உடம்பிற்கும் உயிருக்கும்உள்ள நட்பு ஒரு பறவை பருவம்வந்தவுடன் தன்னோடுவந்த முட்டை ஓட்டை விட்டுவிட்டு வெளியே பறந்தாற்போன்றது என்றார் பரிமேலழகர். குடம்பை என்றால் முட்டை என்று பொருள் கொண்டார். ஆனால் மணக்குடவரோ குடம்பை என்றால் கூடு என்று பொருள் கொண்டு ஒரு பறவை தான் வாழும் கூண்டை விட்டு வெளியே பறந்தாற்போல என்று உரைத்தார். இந்த உரையை பரிமேலழகர் மறுத்து அது சரியல்ல என்று காரணம் காட்டுகிறார். கூண்டு புள்ளோடு பிறந்திலது. உடலோ உயிரோடு உண்டாயது. புள் கூண்டிற்குத் திரும்பி வரும். உயிரோ திரும்பி வாராது. ஆகவே இந்த உவமை சரியல்ல என்கிறார். ஆனால் இக்குறள் உரைபோல் அடிக்கடி காரணம் காட்டி வரும் நாலடியார், குடம்பையைக் கூண்டு என்றே உரைக்கிறார். அதற்குச் செய்யுள்,

கேளாதே வந்து கிளைகளால் இற்றேன்றி
வாளாத போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனெழியக் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

மனிதர்கள் ' வரலாமோ ' என்று கேட்காமலே வந்து உறவினராய்க் குடும்பத்தில் தோன்றி சிறிது காலமிருந்து, தமது கூடுகள் மரங்களில் தங்கும்படி அவற்றைவிட்டு சும்மா சொல்லாமலே நெடுந்தூரம் ஆகாயத்தில் நீங்கிப் பறந்து போகிற பறவைகள்போல, உடம்பை உறவினர்க்கு தம்மினின்று நீங்கும்படி வைத்துவிட்டுச் சொல்லாமலே இறந்துபோய் விடுவார்கள் என்பது பொருள். பறவைகள் தமது விருப்பத்தின்படி மரங்களில் வந்து சேர்வதும் விட்டுச் செல்வதும்போல மனிதர் முற்பிறப்பில் செய்த ஊழ்வினை வசத்தால் ஒரு குடியிற் பிறத்தலும் இறத்தலும் அடைவர் என்பது பொருள்.

ஊன்றிப் பார்த்தால் இரு உரையாளரும் வெவ்வேறு நிலைகளில் இருந்து பொருள் கூறுகிறார்கள் என்று அறிய வேண்டும். இரண்டிலும் உண்மை இருத்தல் காண்க. இவ்வாறு பல பொருள் உள்ள குறள்கள் பலவும் இருக்கின்றன.

தலப் பெருமை

காணிப்பாக்கம்

(C. N. P. சாரதி)

ஊர் : காணிப்பாக்கம் - சித்தூருக்கு வடமேற்கே 7 கல்லில் உள்ள ஒரு ஊர். இங்கே தனி விநாயகர் கோயில் ஒன்று உண்டு. மூர்த்தியின் பெயர் வரசித்தி விநாயகர்.

கிழக்குப் பார்த்த சந்நிதி. சந்நிதிக்குமுன் பெரிய திருக்குளம் ஒன்றுண்டு. நவக்கிரக பிரதிஷ்டையும் நாகப் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளன. மதிற்சுவர்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. பஞ்சமூர்த்திகளுமுண்டு. பிரம்மோற்சவம் ஆண்டு தோறும் ஆவணித் திங்களில் நடைபெற்று வருகிறது. கோவிலுக்கு அருகாமையில் ஆறுமுண்டு.

2. சிவாலயம் : கொடிமரமில்லை ; உள்ளே செல்வதற்குத் தெற்கு முகமாக வாயில். கிழக்குபார்த்த சந்நிதி. மூலஸ்தான ஸ்வாமி பெயர் - மணிகண்டேச்வரர் ; சிவலிங்கம் - துவாதசாந்த குலப்பிரமாணம் ; அம்பாள் பெயர் : மரகதாம்பிகை; ஸ்வாமிக்கு இடது பக்கம் அம்பாள் சந்நிதி உள்ளது.

3. இதர மூர்த்திகள் : முதல் வாயிலில் சோழன், மனைவி குழந்தையுடன் சேர்ந்த விக்ரகம். உட்பிராகாரம் : (1) நிருத்த விநாயகர், (2) தக்ஷிணாமூர்த்தி, (3) சித்திவிநாயகர், (4) பிடாரியம்மன், (5) விசுவநாதர், (6) வள்ளிதேவயானை சமேத ஆறுமுக சுவாமி : (7) திருமால், (மேற்கு பார்த்து), (8) பிரம்மா (வடக்கு பார்த்து), (9) சண்டேச நாயனர், (10) துர்க்கை.(மஹிஷாசுரமர்த்தனி), (11) பைரவர் (ஆலயத்திற்கு ஈசானத்தில்), (12) சூரியன் (மேற்கு பார்த்து), (13) அகத்திய முனிவர் வடக்கு பார்த்து), (14) பாலசுப்பிரமண்யர் (தெற்குப் பார்த்து). ஆலயம் மிகவும் பழமையானது. மதிற்சுவர்கள் விழுந்து விட்டிருக்கின்றன. கோவிலுக்கு ஈசான மூலையில் பெரிய ஏரியுள்ளது. ஊர்—நீர்வளம், நிலவளம் பொருந்தியுள்ளது.

4. ஏனையவை : இவ்வூர் சிறிதானலும் சென்ற 7 ஆண்டுகளாக சித்தாந்த சைவ வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு சபை நடைபெற்றுவருகின்றது. அதை நடத்திவரும்

உயர்தவ சிவானந்த அடிகள் தலயாத்திரை செய்து வந்து அண்மையிலே மேலே கண்ட கோயில்களிலே வழிபாடும் குடமுழுக்கும் இயற்றி "முப்பொருள் உண்மை" என்னும் பொருள்பற்றி விளக்கினார்கள். ஊர் மக்கள் பலரும் இக்கழகத்தில் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள்.

"சைவ நீதி"

[செ. சின்னதுரை B. A., யாழ்ப்பாணம்]

"சைவ நீதி" என்று சொல்லுமிடத்து சிவ சம்பந்தமான நீதி என்பது பொருள். சிவம் அன்பே உருவமாக உடையவர். சைவ நீதி அன்பை அடிப்படையாகக் கொண்டதென்பது பொருள்.

தற்காலத்தில் சைவ நீதி அருகி வருகிறது. எங்கும் பொறாமை, வன்மை, சுயநலம், அநியாயம், ஒப்புரவின்மை தாண்டவமாடுகின்றன. சுயநலப் பேய் மக்களுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது. அக்காரணத்தால் சைவ நீதி மிகவும் அருகிவிட்டது. கடந்த யுத்த காலத்தில் கள்ள வியாபாரம், பொய்ப்பிரசாரம், அணுப்பு மலிந்திருந்தன. யுத்தம் நீங்கிய பின்னரும் அத்தீய குணங்கள் மாந்தர்களுடைய உள்ளத்தைவிட்டு நீங்கியபாடில்லை. சுயநலத்தின் காரணத்தால் ஒற்றுமையின்மை அதிகம். எங்கும் மனபாபரப்பு நிலவுகின்றது. எங்கும் அநீதி துலங்குகின்றது. எங்கும் சமானயீனம் தாண்டவமாடுகின்றது. மூன்றாம் யுத்தம் நிகழுமோ என்ற பெரும் பயம் மாந்தரின் உள்ளத்தை வாட்டுகின்றது. பசிப்பிணி ஒருபக்கம் தலைவிரித்தாடுகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபக்கம் இருக்கின்றது. ஈழநாடும் தாய்நாடாகிய இந்தியாவும் சுதந்

திரம் அடைந்தும் பண்டைய தமிழரின் இலட்சியத்தையும் பண்பாட்டையும் கடைப்பிடித்தொழுக இன்னும் வீறு கொண்டு எழவில்லை. அன்னியரின் தளைகள் இன்னும் மக்களை நன்னெறியில் ஓங்காமல் தடைப்படுத்தியிருக்கின்றன. நாம் தமிழர் என்பதை உணர வேண்டும். நம் பண்டைத் தமிழருடைய இலட்சியம் என்ன என்பதை நாம் நன்கு உணரவேண்டும். பண்டைத் தமிழர் அன்பை அடிப்படையாகக் கொண்டு தம் வாழ்க்கையை வாழ்ந்தார்கள். அவர்களுடைய சமுதாய வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை அரசியல் வாழ்க்கை முழுவதும் அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. சைவ நீதி அவர்களின் வாழ்க்கையின் எத்துறையிலும் செறிந்திருந்தது. நாட்டை அரசாண்ட அரசன் தெய்வத்தன்மை உடையவனாய் அன்பிற்கு உறைவீடாய் விளங்கினான். அரசன் தனது குடி சனங்களுக்கு வந்த இடுக்கண்களை தமக்கு வந்தனவாகக் கருதி அரசியலை நடாத்தினான்.

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறுதன் ஞற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந் தீர்த்தறங் காப்பனல்லனோ"

என்ற தெய்வச் சேக்கிழார் சுவாமிகளின் அருள் வாக்குக்கு இலட்சியமாக அரசர்கள் முற்காலத்தில் வாழ்ந்தார்கள். அரசர்கள் குடிசனங்களுக்கு வேண்டிய தேவைகள் யாவை என்பதை உணர்ந்தார்கள். மந்திரிமார்கள் தம் கடமைகளைச் செவ்வனே செய்கிறார்களோ என்பதை இராக்காலத்தில் தெருக்கள், வீதிகள் தோறும் அரசர்கள் தாமே திரிந்து குடிசனங்களின் இன்னல்களைத் தாமே அறிந்து தாமே சனங்களின் நன்மையில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்தார்

கள். நடுவு நிலைமை என்னும் தராசு தளும்பாமல் அரசியலை நடாத்தினார்கள். செல்வர், அதிகாரம் படைத்தவர், உயர் குலத்தவர், சிநேகிதர் என்ற பட்சபாதமின்றிச் சைவ நீதி திறம்பாமல் வாழ்ந்து காட்டினார்கள். மனு நீதி கண்ட சோழன் தனக்கு ஒரே புதல்வன் உளன் என்பதையும் கவனி யாது தரும தேவதையின் வழியில் நின்று பசுக்கன்றை நெரித்துக் கொன்ற தனது மகனைத் தேர்க்காலில் தாமே தேரைச் செலுத்தி மனுநீதியைக் காட்டியதிலிருந்து அரசர் கள் எவ்வளவு நுட்பமாக சைவ நீதியைக் கடைப்பிடித் தொழுகினார்களென்பது வெளிப்படை.

தற்போது நமது நாட்டின் வளர்ச்சியைக் குறித்து அரசாங்கம் அனேக பிரயத்தனம் செய்கிறபோதும், நடுவு நிலைமை, அன்பு, தெய்வ நீதி முதலியவற்றை அடிப்படை யாகக்கொண்டு அவற்றைச் செய்யப்படாத காரணத்தால் அப்பிரயத்தனங்களில் பெறும் பேறு செவ்வனே பெறமுடி யாது. சேர, சோழ, பாண்டிய அரசர் ஆண்ட காலத்தில் நாட்டில் உண்மைச் செல்வம் கொழித்தது. நாட்டில் சமா தானம் நிலவியது. வீரத்தாய்மார்களும், வீரபுருஷர்களும் வாழ்ந்தார்கள். அவர்கள் சைவ நீதியை ஆபரணமாகக் கொண்டார்கள். அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ‘இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்’ என்றபடி செல்வர் கள் பொருளைச் சிவன் தந்தது என்று வறியவர்களுக்குக் கொடுத்துச் செல்வம் பெற்றதனால் உற்றபயனைப் பெற்றார் கள். சுற்றத்தார்க்கும் கொடுத்துத் தாமும் உண்டு வாழ்ந் தார்கள்.

“அரசுகொளீ கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணி
பரவருங் கடவுட் போற்றி குரவரும் விருந்தும் பண்பின்

விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிக ளெங்கும்"

என்று சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் திருநாட்டுச் சிறப்பைப் பற்றிக் கூறும் இச்செய்யுளின் பொருளை நோக்க நோக்க குடிகள் எங்ஙனம் வாழவேண்டு மென்னும் உண்மை விளங்குகின்றது. "ஓதரிய வெழுத்தா மஞ்சுமுறு பிணிவரத் தாமஞ்சும்" என்றபடி ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மாந்தர் இடையறாது உச்சரித்த காரணத்தாலே நோய் அந்நாட்டை அணுக அஞ்சுமாம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காரணத்தால் நமது பண்டைய வீரத் தமிழரின் வாழ்க்கை இலட்சியத்தையும் வெற்றியையும் அறிந்து வாழ நாம் பழக வேண்டும். தெய்வ நம்பிக்கையை சைவ நீதியை அஸ்திவாரமாகக் கொண்டு நமது அரசியல், சமுதாயம் குடும்ப வாழ்க்கையைச் சீர்படுத்தி உண்மை வாழ்வு வாழ முயல வேண்டும். மாடங்கள், கூடங்கள், கோபுரங்கள் மாத்திரம் நாட்டின் உண்மை உயர்வைக் காட்டமாட்டா. அன்பு மெய்யறிவுடைய மாந்தர்தான் நாட்டின் உண்மைச் செல்வம்.

தற்காலத்தில் கை லஞ்சம் வாங்குபவர்களின் தொகை எண்ணற்றது. அரசாட்சியின் பொருளை அபகரித்துச் செல்வர்களாகிறவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள். கள்ள வியாபாரம் செய்து சனங்களை அணுப்பி செல்வர்களாகிறவர்கள் எத்தனைபேரிருக்கிறார்கள். அரசியல் உத்தியோகஸ்தர்கள் தொடக்கம் குடியானவன் ஈறாக உள்ள யாவரும் தூய வாழ்க்கையை அன்பு, நேர்மை, ஒழுக்கம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தால் நாட்டில் உண்மைச் செல்வமும் சமாதானமும் நின்று விளங்கும். செல்வர்களும் மேல் அதிகாரிகளும் சைவ நீதியை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை வாழ்ந்து காட்டினால்

நாடு நல்வாழ்வு அடையும். இப்போது எங்கும் போட்டி மய மாகயிருக்கின்றது. குடும்பத்திற்குப் போட்டி, சகோதரர் களுக்கிடையில் போட்டி நிகழுகின்றது. தாம்மாத்திரம் வாழ்ந்தால் போதும் மற்றவர்கள் எப்படியிருந்தாலும் சரி என்று வாழ்பவர்களே பெரும்பாலோர். இத்தகைய வாழ்க்கை தீங்கை விளைவிக்கத் தக்கது. சமதர்மம் தலை தூக்கிப் பரப்பி சமாதான ஈனத்தை வருவிக்கும் இக்காலத் தில் சைவ நீதியை விளங்கவைக்கச் செய்வது சைவப் பேரறிஞரது கடமையாகும். கல்லூரி வித்தியாசாலை மாண வர்கள், பொது சனங்களிடையில் சைவ வாழ்க்கை நிலவச் செய்வது ஆசிரியரதும் நாட்டுக்குச் சேவை செய்வோரதும் கடமையாகும். சைவப் பிரசாரம் நாடெங்கும் பரவ வேண்டும். ஆசிரியர்கள் தமது கடமையை உணர்ந்து தொண்டாற்ற வேண்டும். நமது நாடு எல்லாத் துறைகளி லும் செழித்தோங்க வேண்டுமானல், நாடு பொருளாதார நிலையில் சமப்பட்டு வரவேண்டுமானல், நாட்டில் சமாதானம் நிறைவு, அன்பு, ஒழுக்கம் பரவவேண்டுமானல், நாடு உண்மை நாகரிகம் என்னும் சிகரத்தை அடைய வேண்டு மானல், சைவர்கள் உண்மைச் சைவர்களாய், சைவ நீதியை மனம், வாக்கு காயம் மூவகையால் செய்யும் செயல்களில் செறிந்து விளங்க வாழ்பவர்களாய், தமிழ்ப் பண்பாடு உடை யவர்களாய் வாழவேண்டும். எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

“வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்”

சிவப்பிரகாசர் வேண்டுவன எவை ?

(அ. நா. ப. திருஞானசம்பந்தன், திருவண்ணாமலை)

சைவ உலகத்திற் சிறந்து வாழும் பேறுடை மக்களுக்கு துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகளைத் தெரிந்துகொள்ளாதிருக்க முடியாது. அன்னார் சிவ பெருமான் பெயரில் அருளிச் செய்துள்ள அரிய கருவூல மன்ன அரும்பாடல்கள் எண்ணில. அவற்றுள் அவர் வேண்டுவன எண்ணியும், படித்தும், கேட்டும் இன் புறத்தக்கன பல. அவர் ஒருசமயம் கார்த்திகைத் திங்களில் ஞானத்தபோதனரை வா, வா வென்றழைக்கும் அரு ளண்ணாமலை போந்து, அவண் பரந்தெழுந்துள்ள மாமலை யினை வலம் வருவதற்குள்ளாக ஒருநூறு பாடல்கள், பொருட்சுவையும், தமிழ்ச்சுவையும், சமயப்பண்பும், கலை உணர்வுங் கொண்டு அருளியுள்ளார். அவற்றில் இருந்து அவர் வேண்டுவன எவை? என்பதை இவண் நாம் ஆய்வோம். அவர் இயற்றிய ஒரு நூறு பாடல்களையும் சேர்த்து "சோணசைல மாலை" என வழங்குவர். இதனை அருணாசல புராணப் பதிப்பிற் காணலாம்.

சிவப்பிரகாசர் வேண்டுவன எவை, எவை ? என நாம் ஆய்தற்கு முன், நாம் வேண்டும் வேண்டுகோள் இறைவ னிடம் எப்படி உள்ளது எனக் காண வேண்டுமல்லவா ? சைவக்குடும்பத்தில் முறையாகத் தீட்சை பெற்று, பண்புற்று வாழும் ஒருவராய் இருந்தாலும், அவரோ "நான் சிவ பெருமான் திருவடிக்கு இலக்காக வேண்டும்" என நைந் துருகுவார். ஒரு வைணவக் குடும்பத்தில் தோன்றும் அன்பர், தண்ணளியும் பண்பும் நிறைந்த சிந்தையோடு

மக்களைக் காணக் கூசினும், அவரோ திருமாலின் பாதார விந்தங்களுக்கு "நான் இலக்காக வேண்டும்" என நைந் துருகுவார். மறுமை இன்பங்கள் இருப்பதாகவே எண்ணுது, இம்மையிற் காணும் இன்பங்களே சிறந்தன எனப் பகற் கனு காணும் வியாபாரக் கூட்டத்தைச் சார்ந்த ஓர் அன்பராய் இருப்பின், அவரோ, சேர்த்த பொருட்குவியல் போதாது, இனியும் பொருள் ஈட்ட வழித்துறைகளை வகுத் தருள்புரிவாய் என இறைவனை வேண்டி, குவித்த பொரு ளில் ஒரு சிறிது இறைவன் திருப்பணிகள் செய்து, அதனைப் பிறர் போற்றத், தானும் இன்புற்று, "நான் செய்த திருப்பணிகளைக் கண்டாவது, என்னை, உன் பாதத்திற்கு இலக்காக்குவாயாக" என்று மனமாரக் கேட்காவிட்டாலும், வாயாரவாவது கேட்பார். இந்த நிலையில்தான் மக்கள் மனம் நேற்றும் நடந்தது; இன்றும் ஓரளவிற்கு நடக்கிறது; இனி ஒரு வேளைத் திருந்திச் செல்லலாம் என எண்ண இடம் மட்டும் உள்ளது. இத் தகைய வாழ்வு மேற்கொள்வதின் விளைவு யாது எனக் கண்டால், பண்புநலக் குறைவேயாகும். பண்பென்னும், பெரும் பொருளைத் தன்னகமாகக் கொண்ட பெரியோர்கள், திருந்திய உள்ளத்துடன், இறைவனைத் தாங்கள் எண்ணி யதை வேண்டினர். பண்பற்றவர்களும் இறைவனை வேண்டு கின்றனர்; பண்புள்ளவர்களும் வேண்டுகின்றனர். இருவர் வேண்டுகோள் ஒன்றுய் இருப்பினும், அவை தன்மையில் வேறுபடுகின்றன. பண்பற்றவர்கள் தங்கள் குற்றத்தை உணராது, அதனைப் பெற்றவண்ணமே இறைவன் இணை யடிகளை அடைய எண்ணுவர். இதற்குப் புறம்பாகப் பண் புற்றவர்கள் நைந்து உருகித், தானும் இறைவன் தன்வயமாகி வேண்டி நிற்பர். இங்ஙனம் வேண்டுங்கால், இறைவன் தண்ணளியோடு, பண்புற்ற உள்ளத்தோடு, வேண்டி நிற்கும்

அன்பர்கள் விழைவைப் பூர்த்திசெய்கிருர் என்பது உண்மை. இதனைப் பின்வரும் உதாரணத்தால் அறியலாம். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற சுந்திரர் மெய்வாக்கால் உணரலாம்.

செந்நாப்போதார் கூறியுள்ளபடி, அயலாரைத் தூற்றிப் பேசுதற்குக் காரணமாகிய ஆராய்தல்போல அவரை நிந்தித்துப் பேசுந் தம்முடைய, குற்றத்தை ஆராய்ந்து பார்ப்பாராஞல், அவருடைய நிலைபெற்ற உயிருக்கு யாதொரு தீங்குமில்லை யென்பதே உண்மை.

> ஏதிலார் குற்றம்போற் றங்குற்றம் காண்கிற்பின்
> தீதுண்டோ மன்னு முயிர்க்கு —குறள்

மேற்கூறிய வகையில் தன் குற்றத்தை எண்ணி, எண்ணி நைந்து கசிந்துருகி அழுது, இறைவனைப் பாடிய பெருமக்கள் அப்ப மூர்த்திகள், மாணிக்கவாசகர் பெருமான், சுந்தரர், சம்பந்தர் போன்ற சைவசமயக் குரவராவர். இவர்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றி எழுந்தவர்களே தாயுமாஞர், பட்டினத்தடிகள் போன்றவராவர். இவர்களைப் பின்பற்றி எழுந்த மிகவும் பிற்காலப் புலவர்கள் பலருள்ளும், இறைவன் திருவடிப் பேற்றினைப் பெறுவதற்கு, எளிய நடையில் பெரிய அருங்கருத்துக்கள் சமைத்து வேண்டுவதில் தலையாயர் சிவப்பிரகாசர் எனலாம். இவர் கவிகளில் கற்பனை நயங்கள் சிறந்து பொலிவுறும். இவர் தன்னைத் தாழ்த்திப் பேசும் இடங்கள் நம்மனத்தையும் உருக்கும். இவரைப்போன்ற அறிஞர்கள் நாட்டிலே தோன்றி மானிட வடிவில் காட்சியை நல்கினும், அன்னுரெல்லாம் மண்ணிடைத் தோன்றினும், மக்களைவிட எல்லாவகையிலும் சிறந்து விளங்குபவர்கள், ஆதலால் மனிதத் தன்மையை யுடையவர்களைக் காட்டிலும்

மேம்பாடுடையவர்கள் (Super Human) என்று கோடல் பொருத்தம். அங்ஙனம் மேம்பாடோடு, வாழ்வு பெற்றவரைப் பற்றிய கருத்துக்களைத்தான், இக்கட்டுரை நமக்கு விளக்குகிறது. அவர் வேண்டுவன எவை என்பதை ஈண்டு ஆய்வோம்.

1. சோண சைலனே! விரைவாகச் செல்லுகின்ற இடபத்தின் மீது ஏறுகின்ற உன்னை, பிறவாதிருத்தலை வேண்டுகின்றவர்கள் வேண்டட்டும். அடியேன் இனிமை பெருகின்ற தமிழ்ச் சொற்களென்னும் மலர்களாற் கட்டிய மாலையை உனக்கு அளிக்கின்ற பிறப்பையே விரும்புவேன்.

> விரைவிடை யிவரு நினைப் பிறவாமை
> வேண்டுநர் வேண்டுக மதரம்
> பெருகுறு தமிழ்ச்சொன் மலர்நினக் கணியும்
> பிறவியே வேண்டுவன் றமியேன்.

2. சோண சைலனே! வெண்மையாகிய திரு நீற்றை அணியும் பெரிய தவத்தையுடைய, அடியார்களுக்கு விருந்து செய்து அடைகின்ற மிக்க வறுமையையும், எடுத்துக் கொண்ட நல்ல விரதத்தினால் இளைத்துப் போகின்ற சரீரத்தையும், கொடியேனாகிய எனக்குத் தந்தருளும் நாளும் உளதோ!

> வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
> விருந்து செய்துறும் பெருமிடியுங்
> கொண்டநல் விரதத் திளைக்கும் யாக்கையுமிக்
> கொடியனேற் கருளுநா ளுளதோ.

3. சோண சைலனே! கரிய கூற்றுவன் வந்து என்னுடைய உயிரைக் கவர்ந்துகொள்ளும் பொருட்டு, மயிலை என்னும் மீனை உண்ணுகின்ற சிச்சிலிப்பறவையைப் போல் காத்துக்கொண்டிருக்கின்றான். நீ அந்த இயமனுக்கு

முன்னே என்னைப் பேரானந்தக் கடலில் மூழ்கும்படிச் செய்து அருள்புரிவாயாக !

வந்துமா மறலி யெனதுயி ருண்பான்
        மயிலையுண் சிரலினிற் கின்ருன்
முந்திநீ யெனையா னந்த வாரிதியிற்
        மூழ்குற விடுத்தருள் புரியாய்.

4. சோண சைலனே ! கூம்பியகைகளும், மலர்ந்த முகமுங் கொண்டு, உன்னை வலம் செய்பவருடைய மேன்மை பொருந்திய, பாத தாமரையில் பொருந்திய பொடியானது உடம்பின்மேல் படுமானல் என் பிறப்போ அழிந்து போகும். அங்ஙனம் பெற்றேனில்லை. பெற்ருல் அருள் புரிவாய் !

கூம்புறு காமு மலர்ந்திடு முகமுங்
        கொண்டு நின்றனை வலம்புரிவோர்
மேம்படு சரணமலர்ப் பொடிமேனி, மேற்படிற்
        பவம் பொடி படுமே.

5. சோண சைலனே ! காட்டிலே வசிக்கின்ற மிருகங்களிலும் கடையேனும், படிக்க வேண்டுவனவற்றைப் படிக்காதவனும், உலக விஷயங்களில் செல்லும், அறிவையே உடையவனும், அறிந்தவர்களைப் பார்த்தால், நாணங்கொள்ளாதவனுமாகிய நான் பிழைக்கும் நாளும் உண்டோ ? அவற்றைத் தவிர்த்து அருள் புரிவாயாக !

கானமே மருவும் விலங்கினுங் கடையேன்
        கற்பவை கற்றிலேன் விடய
ஞானமே யுடையே னறிஞரைக் காணி
        ஞணிலே னுய்யுநாளு ளதோ !

6. சோண சைலனே ! மனத்தை மூடிய ஆணவ இருளோடு ஓ ! இருளே ! உன்னை இப்பொழுது உன்னு

மூலக் கணவனாகிய அண்ணாமலைக் கடவுளால் நீக்குவேன் என்னும் சபதமொழி கூறினேனாதலால், அடியேன் உன்னை அடைந்தனன். சபதம் தவறாமல் எனக்கு நீ அருள் செய்வாயாக.

மூடக விருளோ டுன்னை யின்றுண்ணு
முலையா சாலகற் றுவலென்
சூட்டு மொழியா லடைந்தனன் றமியேன்
சூள்வழு வாது நீயருள்வாய் !

7. சோணசைலனே ! ஐம்புலச் சுருக்கமும், அறிவின் பெருக்கமும், நல்வினைத் துன்னலும், மூடர் கூட்டத்தை நீங்கியிருத்தலும், எக்காலத்தில் அருள் செய்து அடியேனை உன்னுடைய அடிமையாய்ச் செய்து, அருள்செய்வாய் !

சுருக்கு மைம்புலனும், விரிக்கு தேறிவுந்
துன்னுநல் வினமுநீத் தகன்றே
யிருக்கு வெங்கயவ ரினமு மென்றருளி
யென்னை நின்னடிமை செய்தருளாய்.

8. மயல் நீக்கமும் பேரறிவு நிலைத்தலும், உன்னுடைய அழகு பொருந்திய தாமரையில் அன்பு செய்யப்பெற்ற மனத்தையுங் கொண்டிருக்கின்ற உண்மையான தொண்டர்களுடைய கூட்டத்தில் என்னைச் சேர்த்து அருள் செய்வாயாக ! சோண சைலனே.

நீக்குறு மயலு நிலைத்தபேரறிவு
நின்றிரு வடிமலர்க் கன்புசெய்து
காக்குறு மனமு முடைய மெய்த்தொண்டர்
கணத்தினு ளெனைவிடுத் தருளாய்.

9. சோண சைலனே ! மனம் கலக்கமடைந்து இரண்டு கண்களும் இருளடைந்து, இரண்டு காதுகளும் செவிடாகி கோழையானது மேலேறி வாயால் பாய உயிர்போகும்போது

உன்னுடைய வடிவத்தை என்மனத்தில் நினைக்கும் தன்மையை அடியேனுக்கு அருள் செய்வாயாக.

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு
செவிகளுஞ் செவிடு பட்டைம்மே
லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவ
முளங்கொளும் பரிசெனக் கருளாய்.

10. உருத்திராக்க மாலையாகிய பேராபரணமே, அணிகலன் என்று விரும்பி உடம்பின்மேல் அணிந்து, வெண்மையான விபூதியினால் அணியப்பெற்ற திரிபுண்டரக் குறியுடைய நெற்றியோடு உன்னை அடியேன் நேசமுள்ள பூசைசெய்யும்படி அருள் செய்வாயாக. சோணசைலனே !

கண்டிகைக் கலனே கலனென விழைந்து
காயமே லணிந்து வெண்ணீற்றுப்
புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான்
பூசனை புரியுமாறு அருளாய்.

11. சோணசைலனே ! பேராசையை நீக்கி உனது திருவடிகளில் உண்மையான அன்பையடைந்து, நிலையில்லாத பிறவியை காணுகின்ற அடியார் கூட்டத்தை ஆராய்ந்து அடையும்படி பரிசுத்தம் பொருந்திய ஞானக் கண்களை அடியேன் பெறும் வழியைக் கொடுப்பாயாக !

வேணவா வகன்று நின்றிரு வடியின்
மெய்ம்மையன் படைந்து பொய் பிறவி
நாணுவா ரினங்கண் டுறும்படி தூய
ஞான நாட்டம்பெற வருளாய்.

12. சோண சைலனே ! உன்னையே நோக்கி நீங்காத கண்களும் உன்னையே நினைக்கின்ற மனமும், உன்னையே வாழ்த்துகின்ற வாக்கும் எக்காலத்திலுங் ;கொடுத்து உன் திருவடிகளில் என்னை வைத்து அருள் செய்வாயாக !

நின்னையே நோக்கி விடாத கட்புலனும்
நின்னையே நினைக்கு நெஞ்சகமு
நின்னையே துதிக்கு நாவு மென்றருளி
நின்றிடு வடியின் வைத்தருளாய் !

சிவப்பிரகாசர் வேண்டுவன எவை என்று ஒருவாறு கண்டோம். சமயம் என்ற ஒன்றை ஊன்றுகோலாகக் கொண்டு அவர் பல வேண்டினும், அவை அனைத்தும் எல்லோர்க்கும் மிகமிக வேண்டுவனவன்றோ ! இறைவனுக்குப் பாமாலை இயற்றிப் பூமாலை சூடுவதையும், அடியார்களைச் சிறப்பு செய்வதையும், கூற்றுவன் வருவதற்குமுன் தன்னைப்பற்றி உணர வேண்டிய தன்மைகளையும், உலகியலறிவும் - பொது இயல் அறிவும், இறைவன் இன்பவடிவத்தைத் தன் மனத்தகத்தே எப்பொழுதும் இறுத்தி வைக்க அருளையும், உருத்திராக்கமும், திருநீறும் அணியும் பேற்றையும், பேரிடும்பை அளிக்கும் பேராசை நீக்கி இறைவன் திருவடிகளை அடைதலும் அன்றி, அவர் வேறொன்றையும் வேண்டவில்லை அல்லவா ? என்னே அவர் மனத்திட்பம் ! என்னே அவர் மாண்பு !

சைவ சமயத்தில் உள்ளவர்கள் இன்று எத்தனைபேர் சிவப்பிரகாசர் வேண்டியவற்றை, மனமார வேண்டி, வாயாரப் பா இசைக்காவிட்டாலும், சிந்தனையாவது செய்கிறார்கள் என்று கண்டால் விரல்விட்டு எண்ணி விடலாமல்லவா ? சமயத்தில் உள்ளவர்களே, சமயத்திற்கு இடையூறு விளைவிக்கிறார்கள் என்று சுருங்கச் சொல்லினால் அது நியாயமாகத்தானே இருக்கும். சமயம் படித்தவர்களிடையேயுங் கூட, ஏட்டளவில் நிற்கிறதே ஒழிய, பெரும்பாலும் நடைமுறையில் கொள்ளப்படவில்லை என்று வாய்விட்டுத் தாராளமாகச் சொல்லலாம். அடிக்கின்ற காற்றெல்லாம் ஒரே காற்றாகுமோ ? அதில் தென்றல், வாடை, கோடை

எனப் பாகுபாடில்லையா ? அவ்வக்காற்றும் தன்மையில் மாறுபடவில்லையா ? அதுபோல சமயத்தில் காலப்போக்கில் நுழைக்கப்பெற்ற திருவிழாக்கள் அன்று தென்றல் காற்று போன்றிருந்தாலும், இன்று வாடைக் காற்றாகவே மாறி யுள்ளன. இறைவன் திருவுருவங்களின், உண்மை நிலையை உணராது வாழும் இன்றைய நம் மக்கள், மாப்பாவைகளை ஒத்து அலங்காரங்கள் பல தம் மனத்திற்குகந்தபடி செய்து உண்மை நிலையை உணர்த்தாது, களியாட்டங்களிலேயே காலங் கடத்தி வருவது வருத்தத்திற்குரிய ஒன்றேயாகும். உண்மைத் தத்துவங்கள் மறைந்து, போலிக் கூத்துகளே இன்று இடம் பெற்றுள்ளன. ஐயகோ! எண்ண மனம் வரவில்லை ; சொல்ல நா எழவில்லை ; இதோடா நிற்கிறார் கள். தண்டல் வசூல் செய்து சுண்டல் கொடுப்பதில் ஒரு தனி மகிழ்ச்சி ; ஆர்ப்பாட்டங்கள் என்ன ? ஆரவாரங்கள் என்ன ? இந்நிலை நீங்கி உண்மை நிலையை—உயர்ந்த பண்பு கள் அடங்கிய அண்ணல் சிவப்பிரகாசர் வேண்டிய கருத்துக் கள் மக்கள் எல்லோர் மனத்திலும், நீக்கமற யாண்டும் நின்று நிலவும் நாள் என்நாளோ ? அந்நாளே சைவ உலகம் பெற்ற நன்னாள் எனலாம் அல்லவா ?

சிவப்பிரகாசர் தன்னிடம் பண்பு நிறைந்த குணங்கள் இல்லை என்று இறைவனிடம் முறையிடுவதைக் கண்டு, அவ ரிடம் குணநலங்கள் இல்லை என்று நாம் அறுதியிட்டுக் கூறி விடலாமா ? கூற இயலாது! தன் குறையை எண்ண எண்ண, எண்ணுமொருவர் அக்குறைகளினின்றும் நீக்கப்படுவார். இருப்பினும் மணிவாசகப் பெருமான் போன்றார், தாம் தூய நிலை கைவரப் பெற்றும், ஒரு காலத்தில் தான் இருந்ததாக அவர் எண்ணி ஏங்குவதை நாம் அவர் பாக்கள் வாயிலாகக் காணவில்லையா ? பொதுவாக, வறுமையில் திணிக்கப்பட்ட ஒருவர், முயற்சியோடு, ஆகூழின் விளைவால், பெருநிதி

யீட்டி வாழுங்காலத்தும், (தற்பொழுது நன்னிலை இருப்பில் பினும்) தாங்கள் செல்வம் வருவதற்குமுன் இருந்த நிலையும் - வாழ்ந்த வறுமை வாழ்வையும், தங்கள் பிள்ளை களிடத்தும், ஏனையோரிடத்துங் கூறுவதைக் காணலாம். இங்ஙனம் கூறுவதில் தனி இன்பம் அடைவதையும் நாம் கண்கூடாய்க் காணலாம். அதுபோலவே, மனிதருள் மேம் பட்ட ஒரு கெழுதகை அறிஞர், தன்னிடம் முன்னர் இருந்த குறைகளைத் தெளிந்த அறிவு அடைந்த பின்னரும் கூறிக் கொள்கின்றனர். முன்னிருந்த நிலையை நீக்கியும், தற் பொழுது அருள் செய்யும் பெருமானைப் போற்றி ஏற்று கிறுர்கள். தெளிந்த அறிவோடு, திருந்திய சீலத்தோடு, உள்ள காலத்துத்தான், சிவப்பிரகாசருடைய கனிந்த உள்ளத்தினின்றும் மேற்கண்ட அருமை வாய்ந்த கருத்துகள் எழுந்தன. எதற்காக ? சைவ உலகத்து மக்களை மாண்போடு வாழச் செய்வதற்காகத்தான் !

உலகத்தில் தோன்றும் பெரியவர்கள், ஒவ்வொருவ ருடைய அறிவும், ஒவ்வொரு துறையில் மேம்பட்டு விளங்கு வதைக் காணலாம். எழுதும் துறையில் உள்ளவர், வாச கர்கள் மனத்தை வன்மை பொருந்திய சொற்கள் வாயிலாக ஈர்த்துப் பெரும் புகழுடன் வாழ்வர். நல்ல இசை ஞானம் பெற்றவர் நன்ருகப்பாடி இசையரசு எனப் பெயரெடுப்பர். ஆனால் நன்ருகக் காரிகைகற்று கவிதை பாடினுலும் நல்ல கவிஞர் என்று பெயரெடுக்க முடியாது ? யாரிடம் சிவப் பிரகாசரிடம். ஏன் ?

கவிதை பாடுங் கவிஞர்கள், மிடுக்கிலா ஒருவனை வீமனே எனவும், கொடுத்து இன்பந்துய்த்து வாழத் தெரியாதவனைக் கொடை வள்ளல் என்றும், கல்லாத ஒருவனை செல்வம் பெற்று வாழுங் காரணத்திற்காக கற்ற பெரியவரே என்று பலவாறு வாயாரப் புகழவேண்டா

நிலையில் உள்ளவரைப் புகழ்ந்து காலத்தை வீணே கடத்திச் செல்வதை நாம் காணலாம். இவர்கள் - இத்தகைய பாக்கள் இசைக்க ஆசைப்படும் அன்பர்கள் - சிவப்பிரகாசருடைய கவிஞர் பட்டியலில் பெயர்பெற முடியாது. சிவப்பிரகாசர் முடிவாக என்ன வேண்டுகிறார் என்பதைக் காண்போம்.

அற்பத் தொழிலை உடைய மனிதர்களை, மலைகள் தோறும் விளையாடுகின்ற முருகக் கடவுளே யென்றும், வளைவாகிய கரும்பு வில்லை உடைய மன்மதனே யென்றும், சிறப்பித்துப்பாடி காலத்தை வீணே வரிதில் கழிப்பர் புலவர். இங்ஙனங் கழிக்கின்ற புலமையை என்னிடம் ஒழித்து அடியேனுக்கு அருள்செய்வாயாக - சோணசைலா ! என வேண்டுதலை முடிக்கிறார்.

குன்று தோறுடுங் குமரனே யெனவுங்
கொடுஞ்சிலை மதனவே ளெனவும்
புன்றொழின் மனிதர் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும்
புலமை தீர்த்து எனக்கருள் புரிவாய்

மேம்பாடடைந்த - பண்புபட்ட உள்ளத்தினின்றும் எழுகின்ற கருத்துகள் இதனைவிட வேறாக இருக்க முடியுங் கொல் ! சாதாரணபாக்கள் இயற்றும் புலமை வந்தவுடன், தண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டானைப் பாடா தொழிந்து நிற்கும் கவிஞர் நிலையும் நிலையாமோ ?

“ சிவப்பிரகாசர் சைவ உலகில் பல அரிய காலத்திற் குரித்தான கருத்துக்கள் அடங்கிய நந்தா விளக்கு ” என்று கூறின் அது பொருந்துமல்லவா ?

கறையிழிவு

(சிதம்பரம் நாகரத்தின சுவாமிகள்)

கறையிழிவு அல்லது வித்திழிவு என்னுங் கொடிய நோயினாலே பல இளைஞர் நமது நாட்டில் துன்புற்று வருகின்றனர். இதனை ஆங்கில மருத்துவ நூலார் "பெர்மதோரியா" (Spermatorrhoea) என்னும் பெயரிட்டு வழங்குவர். "தாதுநட்டம்" என்று சித்த மருத்துவர் கூறுவர். "பித்த வெட்டை" என்றுங் கூறுவர்.

பெரும்பாலும் இரவில் துயிலும்பொழுது "கறையிழிவு" உண்டாகலாம். சிலருக்குச் சிறுநீர் கழிக்கும் போதோ அல்லது மலங்கழிக்கும் போதோ சிலதுளி வித்து நிலத்தில் விழும். சிலருக்கு பெண்களை நினைத்த அளவிலேயே வித்து உருகிக் கசிந்துவிடும். சிலருக்குச் சிற்றின்ப நூலைப் படித்த மாத்திரத்திலும், சிலருக்கு அழகிய மங்கைகளைப் பார்த்த மாத்திரத்திலும், சிலருக்கு மகளிரைத் தீண்டிய அளவிலும் இந்நோய் உண்டாவதுண்டு.

இந்நோயினாற் பற்றப்பட்ட இளைஞன் நரைதிரை மூப்பினாலும், தசைநரம்புச் தளர்ச்சியினாலும் வருந்துவன். அவனுடைய கன்னங் குழி விழுந்துவிடும். தசை வளர்ச்சி குன்றும். உடம்பு வாடி வதங்கிப் போய்விடும். இளமைப் பருவ வலிவும் வனப்பும் சிறிது சிறிதாகக் குறையும். முகத்திலும் கண்களிலுமிருந்த ஒளி சிறிது சிறிதாய் மங்கிவிடும். ஆண் குறியுந்திரைந்து சுருங்கித் துவண்டு போகும். முடிவில் அவன் ஒரு நடைப்பிணந்தான். இவ்வுலகமே அவனுக்கு இருண்டு விட்டதாகக் கூடத்தோன்றும். மாணவனாயிருப்பின் அவன் கற்றதை யெல்லாம் மறப்பெனும் பகைவன் சூறையாடி விடுவான். பின்னர் அறிஞனாய்த் திகழ

முடியாது. இதனை யுணர்ந்தே பண்டைத் தண்டமிழ்ச் சான்றோனாகிய பேராசிரியன் தன்மாணாக்கர்க்கு இலக்கணங் கூறுகையில் அவர் "கடுநோ"யிலராதல் வேண்டுமென மொழிந்தான். பவணந்தி முனிவனும் "பிணியன்" நன் மாணாக்கன் ஆகானெனச் சூத்திரஞ் செய்தான். நீண்ட காலம் கறையிழிவினால் வருந்தும் நோயாளியின் உள்ளங் கையில் வெள்ளைப் புள்ளிகள் உண்டாதலியல்பு.

இந்நோயுடையோர் வெப்பத்தை மிகுக்கக்கூடிய கார்ப்புச் சுவையினையும் புளிப்புச் சுவையினையும் ஒழித் தல் வேண்டும். காலையில் நான்கு மணிக்கு எழுந் திருந்து குளிர்ந்த நீரில் முழுகுதல் வேண்டும். மலச் சிக்கலிருக்குமாயின் 'தாமரை யிருப்பு' எனப்படும், பதுமாசனத்தையும். 'மயிலிருப்பு' எனப்படும் மயி லாசனத்தையும் கால் மணியிலிருந்து ஒருமணி நேரம் வரையும் பழகலாம். மூச்சுப் பழக்கமெனப்படும் பிராணா யாமத்தையும் ஐந்திலிருந்து பத்துப் பதினைந்து நிமிடம் வரையும் பழகலாம். இப்பழக்கத்தால் மலச்சிக்கல் நோய் அடியோடொழியும். காலையில் உணவருந்தாமலிருத்தல் நலம். உணவருந்த விரும்பினால் நேரிற் கறந்த பச்சையான ஆவின்பாலையும், சீமைத்தக்காளிப் பழச்சாற்றினையுங் கலந்து அரைச்சேர் அல்லது முக்காற்சேர் பருகலாம். நண்பகற் காலத்தில் கைக்குத்தலரிசியினால் சமைக்கப்பெற்று நெய் கலந்து பொங்கல் அல்லது பாற்சோற்றையும், ஒருவித சுவையுங் கலவாத பொன்னாங்காணிக் கீரைக் கறிகளில் ஒன்றும் உண்ணலாம். உருளைக்கிழங்கு வாழைக்காய் முதலியவற்றின் வறுவலையுங் கலந்துகொள்ளலாம். இவற் றில் காரம், கரிப்பு, புளிப்பு முதலிய சுவைகளைக் கலத்தல் கூடாது. சுவைப்புலனை அடக்க முடியாது தவிப்பவர் வேண்டுமானால் சிறிது உப்பையும், சிறிது மிளகு காரத்தை

யுஞ் சேர்த்துக் கொள்ளலாம். இரவுப் பொழுதில் பழவுண வும் பாலும் உட்கொள்ளலாம். அல்லது பாலடிசில் மிசைய லாம். இந்நோயையுடையவர் திருமணஞ் செய்யாதிருத்தல் நலம். ஏனெனில் இவர் நோய் மிகுந்து விடுவதோடல்லா மல் இவர்க்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் இந்நோய் வருதல் திண்ணம். மணமானவர்கள் நோயினை அடி யோடு நீக்கிக்கொண்டு ஒரு திங்களில் ஆறுமுறை மட்டும் சேரலாம். நோய் நீக்கும் முறைகள் இன்னுஞ் சில வுண்டு. அவற்றைப் பெரியோர் மணி, மந்திரம், மருந்து என வழங்குவர். மணியிக்காலத்திருப்பதாகத் தெரிய வில்லை. மந்திரம் வல்லார் அத்திப்பூத்தாற்போல் அங் கொருவர் இங்கொருவர் காணப்படுகின்றனர். மாந்திரி கரைக்கொண்டு மந்திர சித்தியினால் இந்நோயை முற்றிலுங் களைந்தெரியலாம். அதுவே சிறந்த வழி. அவர் விந்து ஒழுகாவண்ணம் தம்மனோசக்தியால் நிறுத்திவிடுவர். ஆனால் போலிகளைக்கண்டு ஏமாறக்கூடாது. நல்ல மாந்திரிகர் கிடைக்காவிடில் நல்ல தமிழ் மருத்துவ நூலாரைக் கலந்து பச்சிலை மூலிகைகளால் நோயை நீக்கிக்கொள்ளல் நலம். நீக்கிக்கொண்டபின் ஒவ்வொருவரும் ஆணுக்கத்தை ஓம்பித் தமது வலிமையையும், வனப்பையும், அறிவையும் வளர்த் துக் கொள்ள முயலவேண்டும். சிவயோகிகளைச் சார்ந்து மூலக்கனலை மதிமண்டலத்தின் மேலெழுப்பும் வழியை நன்கு பயின்றுகொண்டால் மேலான காயசித்தியுண்டாகும் என்பது எமது வாழ்விற்கண்ட உண்மை. செல்வந்தரா யிருந்தால் குளிர்ச்சி மிகுந்த நீலமலை, பொதியமலை முதலிய விடங்களில் தங்கி நீர்வீழ்ச்சியிலுஞ் சுனைகளிலும் நீராடி நோயை நீக்கிக் கொள்ளலாம்.

அம்மானை

தருமையாதீனப் புலவர். முத்து. சு. மாணிக்கவாசக
முதலியார், ஆரணி.

அம்மானை, அம்மனை என்னும் பெயரியதொரு விளையாட்டு நம்நாட்டிற் பண்டு தொட்டு நிகழ்ந்து வரும் பயிற்சியுடையது. இன்றும் சிற்றூர் மகளிரிடம் கல் முதலிய கருவியை அம்மனையாக் கொண்டு ஆடும் பழக்க முண்டு. "அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார் தம்மனையிற் பாடுந்தகை" என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அவ்விளையாட்டு இசைப்பாட்டுடன் நிகழ்வதெனல் விளங்கும். அம்மனைக் கருவி முத்தாலும் மரகதத்தாலும் நீலத்தாலும் அமைந்திருக்கும். மூன்று கொண்டு ஆடப்படும். ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறத்ததாயும் ஓரே நிறத்ததாயுமிருக்கலாம். "செம்பொனம்மனை" யுமுண்டு. குமரகுருபரர். கடற்றிரை மீனை முகந்து அம்மனை யாடுதலையுங் கவியோ வியத்திற் காட்டினர்.

கள்ளூறு கஞ்சக் கரத்தூறு சேயொளி
  கலப்பச் சிவப் பூறியும்
கருணைப் பெருக்கூற வமுதூறு பார்வைக்
  கடைக்கட் கறுப் பூறியும்
நள்ளூறு மறுவூ றகற்றுமுக மதியில்வெண்
  ணகையூறு நில வூறியும்
நற்றரள வம்மனையோர் சிற்குணத் தினை மூன்று
  நற்குணங் கதுவல்காட்ட
உள்ளூறு களிதுளும் பக்குரவ ரிருவீரும்
  உற்றிடுது வாதசாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்ட
  ருழுவலன் பென்புருக நேக்

கள்ளூற வுள்ளே கசிந்தூறு பைங்தேற
லம்மானே யாடியரு ளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானே யாடியரு ளே. 29

எனக்குமரகுருபர முனிவரருளிய அங்கயற் கண்ணியம்மை பிள்ளைத் தமிழ்ச் செய்யுளா லொரே நிறத்தம்மானை (முத்தா லானது) உண்மை யறியலாம்.

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமும்
ஒண்டரளத் திரளும்
ஒழுகொளி பொங்க விழைத்திடும் அம்மனை
ஒருமூன்று அடைவில் எடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற் சேலநின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங் குயிலும்
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலை மேற்
பேச விடுப்ப கடுப்ப அணைத்தொரு
பேடையோ டரசவனம்
அள்ளல் வயற்றுயில் மதுரைத் துரை மகள்
ஆடுகே அம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுகே அம்மனையே

என்னுந் திருப்பாடலால் மரகதம் நீலம் தாளம் என்னும் மூன்றாலமைந்த முந்நிறத்தம்மனையுண்மை அறியலாம். இத னுள் மூன்றாவது தூது சென்ற தன்பயனை வயலில் நிகழ்ந்த தாக் குறித்த செயலாற் பெறவைத்த நட்பம் அறிஞருள் ளத்தை ஆசிரியர் திருவடியிற் சார்த்தி யின்புறுத்தும்.

இத்தகைய கருவி கொண்டாடும் அம்மானை விளையாட்டு ஒவ்வொரு கலம்பகத்துள்ளும் ஒருறுப்பாயடங்கப் பாடப் பெறுவதுண்டு. அங்ஙனம் பாடிய புலவருள் சிலரே அதனிலக்கணத்தைத் தொன் முறை யறிந்து நன்கு பாடினர் பலர் வழுவினர். அப்பாடல் கலித்தாழிசையாயிருக்கும். யாப்பிலக்கணத்துள் அதனிலக்கணம் முற்றக் கூறப் பட்டிலது. முன்னோர் பாக்களினமைதி நோக்கி யுணர்தற் பாலது. பின்னோர் பலர், எல்லாம் காய்ச்சீராயிருத்தல் வேண்டும் என்று கொண்டனர். சீரே, அடியிலும் நான் கடியே போதுமெனக் கொண்டாருமுளர். ஐந்தடியிற் குறையாத பாடல் பாடிக்கொண்டு ஆடுவர். ஆட்டம் முடியும்போது ஆறுவதடியாக ஒன்று பாடி முடிப்பர். ஆறுவதடி பாடினால் ஆட்டம் முடிந்த தென்றும். இது சிலப்பதிகாரத்திலுள்ள வாழ்த்துக்காதையில் வரும் நான்கு பாடல்களையும் நன்கு நோக்குவார்க்கு விளங்கும். அரங்கேற்று காதை யுரை மேற்கோளாகிய 'சிந்துப் பிழுக்கை ......வரிக்கூத்தின் குலம்' என்னும் பழம் பாடலால், அம்மனையின் தொன்மை புலனும். தொன்றும் இன்றும் மாறுபாடும் வேறுபாடும் அடைதல் உண்டன்றோ ! அம்மனைப் பாட்டும் தொன்னெறி பிறழப் பின்வந்த புலவராலியற்றப்பட்டன.

இங்கு அறிஞர் எல்லோரும் உற்றுணரத்தக்கது, அம்மானைப் பாடல் வெண்டளை பிறழாது பாடப் பெறல் வேண்டுமென்பதாம். இரட்டைப் புலவர் பாடியதாக வழங்கப்படும் 'மூவரம்மானை' என்ற பெயர் ஆடுவோர் தொகையைக் குறிக்கும். மூவர்கூடி ஆடுவது அம்மானை விளையாட்டு அம்மூவரும் வினவிடையாக ஒரு பொருட் கருத்தமையப் பாடுவர். ஒருத்தி,

'வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை'

என்று வினவினள். மற்றொருத்தி, அவ்வடி யொற்றி,

'ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை'

என்று விடையிறுத்தாள். வேறொருத்தி,

'சோழன் புகார் நகரம் பாடேலோ ரம்மானை'

என்று பாடி ஆட்டத்தின் முற்கூற்றை முடித்தாள்.

இவ்வாறே ஏனைய மூன்று பாடல்களையும் நோக்குதல் வேண்டும். அம்மனையாட்டம் முடித்து வேறாட்டம் தொடங்குவான் எண்ணியபோது, மூன்றுமவள்,

'கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை.'

என்று ஈரடிபாடி முடித்தவாறறிக.

சிலப்பதிகாரத்துள் வரும் ஊசல்வரி வள்ளைப்பாட்டு முதலியவற்றாலும் வெண்டளை பிழையாது நிற்றல் குறிக் கொளத்தக்கது. 'தீங்கரும்பு', 'பாடல்சான் முத்தம்', 'சந்தூரற்பெய்து' என்னுந் தொடக்கங்களையுடைய மூன்று பாடலும் முறையே சோழ பாண்டிய சேரரைக் குறித்தனவாதலின், அவர் தார் மூன்றுஞ் சொல்லப்பட் டன. படவே, 'பாவைமார் ஆர் இறக்கும் பாடலே பாடல்' என்றிருத்தற் குரியது பிழைபட்டுளது என்பது புலனாகும்.

திருவாசகத்துள் வருந் திருவம்மானையும், சைவ எல் லப்ப நாவலரும் பாடிய கலம்பகங்களுள் வரும் அம்மானை யும் வெண்டளை பிறழாமல் இனிதமைந்திருக்கும் எழிலை நோக்கியின்புறுதல் செந்தமிழ் வேட்டோர்க்கு வந்த நல் விருந்தாகும்.

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

என்னுந் திருவாசகத்தைப் பாடிக்களிக்க.

'துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்'

என்னும் அடியில் எல்லாம் காய்ச்சீராயில்லை. அவ்வா றிருத்தல் வேண்டும் என்னும் விதி எங்கு எவரால் குறிக் கப்பட்டது? பழங்காலப் பாடலமைதியை நோக்காமல் தாமே படைத்திட்டுக் கொண்ட விதியன்றோ அது?

திருவாசகத்தம்மானைக்கும் ஏனைய அம்மானைக்கும் மற்றொரு வேறுபாடும் அறியத்தக்கது. சிலப்பதிகாரத்து அம்மனையிற் கடைப்பாடல் போலத் திருவாசகத்தில் எல்லா அடிகளும் ஒரெதுகையிலமைந்த அழகு நோக்கி யுவத்தற்குரியது.

குமரகுருபர முனிவர் அருளிய மதுரைக் கலம்பகத் தும் காசிக்கலம்பகத்தும் வரும் இருபாடலும் நோக்குக.

'இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
ஆனாலுங் காயமில்லை ஐயரவர்க் கம்மானை'

'கலைமதியின் கீற்றணிந்த காசியகி லேசர்
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்கா ணம்மானை
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனரே யாமாகின்
மலைமகட்குப் பாகம் வழங்குவதே னம்மானை
வழங்காரோ் அப்பாலு மாலானா ரம்மானை'

இவ்விரண்டும் நிரையசைமுதலாத் தொடங்கும் பாடல். அதனால், அடிதோறும் தொடர்ந்து வெண்டளை பிழையாத வண்ணம் அமைந்திலது. அவ்வவ்வடியின் மட்டும் தளை தட்டலின்றி நின்றவாறறிக. சிலப்பதிகாரத்தில்,

" கடவரைகளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யார் அம்மானை "

எனமுதல்வி பாட்டில் தளைதட்டாமை காண்க. அவ்வாறே அடுத்த இருவர் பாட்டிலும் அந்நிலை காண்க. இந்நிலை,

' கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியன
வெளிவந்த மலையனுங் காண்பரிய வித்தகனை '

என்னும் அடிகளையுடைய திருவாசகத்திலும் மேற்குறித்த இரண்டு கலம்பகப் பாக்களிலும் அமைந்திலது.

திருவாசகத்தம்மானை மகளிர் பலர் ஒருங்கு சேர்ந்து பாடும் வண்ணம் அமைந்தது. மற்றவை மூவர் வினவிடையமையப் பாடி முடிப்பதாக அமைந்தவை.

புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் தில்லைக் கலம்பகம் திருவரங்கக் கலம்பகம் முதலியவற்றுள் வரும் பாடல்கள் சிலப்பதிகாரப் பாடல் போலமைந்தவை.

திருவாமாத்தூர்க் கலம்பகம் திருவேங்கடக் கலம்பகம் மூவரம்மானை முதலியவற்றுள் வரும் பாடல்கள் தொன்னெறி நோக்கி யமைத்தனவாக இல்லை.

சிலப்பதிகாரத்தில் வரும் அம்மானை நான்கனுள்ளும் முடிவிற் ' பாடேலோ ரம்மானை' என்றுள்ளது. திருவாசகத்தில் திருவெம்பாவையுள் ' பாடேலோ ரெம்பாவாய் ' என வந்துள்ளது. இவ்வீரிடத்தும் நோக்கின் பாடுவல் ஓர் எனப் பிரித்துரைக்கும் பொருள் பொருந்தாமை விளங்கும். அது மரூஉ மொழியாகும். 'பாடுதும் வம்மெல்லாம்' 'பாவையைப்

பாடுதும் வம்மெல்லாம் ' என்று வருஞ் சிலம்படிகளை நோக்கின் அது பாடுதும் எல்லோரும் என்பதன் மரூவாஉதல் ஊகித்துணரப்படும். ஆட்டங்களிற் பாடும் பாட்டுக்களிற் பெரும்பாலும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை அமைந்திருத்தல் அறிதற்பாலது.

இந்நாளில் எண்சீராசிரிய விருத்தமே பெரிதும் பாடுகின்றனர். சிறிது அழுகைப் பாட்டு. அவரெல்லாரும் பழம் பாடல் வகையை உணர்ந்து, அவ்வகைப் பாடல்பாடி உலகை உவகையுறச் செய்க.

ஆரூரரின் அருள் வாழ்க்கை அளவு யாது ?

[மா. சிவகுருநாத பிள்ளை]

விஞ்ஞான அறிவுப் பெருக்கால் இயந்திர உதவி கொண்டு அரும் பெருஞ் செயல்களை வியக்கத் தக்க முறையில் இக்கால மக்கள் மிக்க விரைவுடன் செய்யினும், உடல் வலியில் முற்கால மக்களுக்குக் குறைந்தவரே ஆவர்.

மிக்க விரைவில் செல்லும் யாத்திரை வசதிகளை உடையது இக்காலம். ஆதலால் மிக அருகில் உள்ள இடங்களுக்குக்கூட கால் நடையாய்ச் செல்ல இக்காலமக்கள் மலைப்பதோடு நடந்து செல்வதைக் குறையாகக் கருதுகின்றனர். முற்காலத்தில் காடுமுரடான பாதைகளில் *பெருஞ்சுமைகளுடன் பலர் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வந்துள்ள

*இப்பொழுதும் இமயமலையின்மீது திருக்கேதார, பத்திரி, கபில முதலிய இடங்களுக்குச் செல்லும் யாத்திரை வாசிகளின் பெருஞ் சுமைகளை மலைவாசிகள் சுமந்து செல்வது நோக்கத்தக்கது.

னர்.* இவ்வாறு கால்நடையாய்ச் சென்றவர்கள் நாள் ஒன்றுக்கு சுமார் 80 மைல் வரை சென்றுள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள.

திருக் கண்ணப்பர் பிறந்த ஊர் பொத்தப்பிநாட்டு உடுப்பூர். இது சித்தூர் மாவட்டத்தில் இராசம்பேட்டைக்கு அருகில் உடுக்கூர்† என இப்பொழுது வழங்குகிறது. இதற்கும் சீகாளத்தி மலைக்கும் 40 கல் தூரம் உள்ளது. முதன் முதல் கன்னி வேட்டைக்குக் காலையில் உடுப்பூரைவிட்டுப் புறப்பட்ட பதினாறு வயதுடைய கண்ணப்பர் பல விலங்கினங்களையும் கொன்று குவித்துக் கொண்டு 40 கல்தூரம் ஓடி உச்சி வேளையில் (ஆறுமணி நேரத்தில்) சீகாளத்தி மலையை வந்தடைந்தார் எனின் முற்கால மக்களது விரைவு ஆற்றல் முதலியன விளங்குகிறதல்லவா? நாணனும் காடனும் கண்ணப்பர் தேவுமால் கொண்டது கண்டு உடனே பசியுடன் திரும்பிப் போய் உடுப்பூரை அடைந்து நாகனிடம் தெரிவித்திருப்பதால் 80 கல்லுக்கு மேல் ஓர் தினத்தில் நடந்தது விளங்கும்.

சைவ, வைணவ அடியார்களுள் தல யாத்திரையை மேற்கொண்டவர்கள் பலர். அவர்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களது யாத்திரைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவர்களது இறுதி வயது முறையே 16, 81, 18 என ஓர் தனிப்பாடல் குறிக்கின்றது. எனவே 18 வயதில் இறையடி எய்திய சுந்தரர் தடுத்தாட்கொள்ளப் பெற்ற பின்

---

*பெருஞ் செல்வர்கள் அரசர்கள் முதலியோர் பல்லக்கு, குதிரை, யானை, தேர் முதலியவற்றில் செல்வர்.

†உயர்திரு சி. கே சுப்ரமண்ய முதலியார் அவர்கள், பதிப்பித்துள்ள 'கண்ணப்ப நாயனர் புராணம் பக்கம் 243-ல்; உயர்திரு சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி. எ., பி. எல். அவர்கள் நாயனரின் ஊர்' என்ற தலைப்பின்கீழ்க் கூறியுள்ளதைக் காண்க.

6 பெரும் யாத்திரைகளையும் 5 சிறு யாத்திரைகளையுஞ் செய்து இரு திருமணங்களையும் முடித்துக் கொண்டு வாழ்ந்துள்ளார் என்பது இதனாற் பெறப்படுகின்றது.

இவர் செய்த யாத்திரைகளாவன:—

(1) திருவெண்ணெய் நல்லூரில் இருந்து திருவாரூர் வருகையும் பரவையை மணந்ததும் - பெரும் யாத்திரை. (*த. பு. 73—123.)

(2) குண்டையூர் திருக்கோளிலி சென்று மீண்டது. சிறு யாத்திரை. († ஏ. பு. 16-22.)

(3) திருநாட்டியத்தான் குடிக்குப்போய்க் கோட்புலியாரைக் கண்டு மீண்டது. சிறு யாத்திரை. (ஏ. பு. 31-44.)

(4) திருப்புகலூர்ச் சென்று செங்கல்லைப் பொன்னாகப் பெற்று மீண்டது. சிறு யாத்திரை. (ஏ. பு 46-54.)

(5) கொங்கு நாட்டுப் பேரூர்வரை சென்று திரும்பி திருமுதுகுன்றத்தில் பொன்பெற்று ஆற்றில் இட்டு வந்தது. பெரும் யாத்திரை (ஏ. பு. 56-123.)

(6) தொண்டை நாட்டில் வடக்கே சீகாளத்திவரை சென்று திரும்பித் திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து கண் இழந்து மீண்டது. பெரும் யாத்திரை. (ஏ. பு. 142-302.)

(7) திருப்புன்கூர் சென்று ஏயர்கோனை நட்புக்கொண்டு மீண்டது. சிறு யாத்திரை. (ஏ. பு. 395-407.)

(8) திருநாகைக் காரோணம் சென்று பரிசுகள் பெற்று மீண்டது. சிறு யாத்திரை. (‡க. பு. 63.)

---

*தடுத்தாட்கொண்ட புராணம்.

† ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் எண்கள் பாட்டெண்கள்.

‡கழறிற்றறிவார் நாயனர் புராணம்.

(9) சேரமானுடன் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண்டு மீண்டது. பெரும் யாத்திரை. (க. பு. 83-121.)

(10) சேரமானுடன் மலைநாடு சென்று பின் தான் மட்டும் திருவாரூர் மீண்டது. பெரும் யாத்திரை. (க. பு. 129-172)

(11) திரு அஞ்சைக்களம் சென்று அங்கிருந்து திருக் கயிலைக்கு எழுந்தருளியது. பெரும் யாத்திரை. (*வெ. ச. 341.)

இவ்யாத்திரைகள் யாவும் திருவாரூரை இருப்பிடமாய்க் கொண்டு செய்தவை.

தடுத்தாட்கொள்ளப் பெற்ற திருமணம் சுமார் பதினேந் தாண்டிலாவது நடந்திருக்கவேண்டும். அதன் பின் 18 வயதிற்குள் இவரது இரு திருமண வாழ்க்கையும் 11 யாத் திரைகளும் 18000 பாடல்களையும் இயற்றியிருக்க முடியுமா எனச் சிலர் ஐயுறக்கூடும். எனினும் கீழ்க்கண்ட சான்று கள் இவ் ஐயத்தை நீக்கவல்லனவாகும்.

(1) இறைவனது அருள்பெற்ற அடியவர்கள் இல்லற வாழ்க்கையில் இருப்பினும் அதனுள் நம்முள் ஒருசிலர் போல் ஆழ்ந்து இருக்கமாட்டார்கள். இரு திருமணங்களைப் புரிந்துகொண்ட இவர் தம் தேவியார்களுடன் இல்லறத்தில் இணைபிரியாது இராது அடிக்கடி யாத்திரையை மேற் கொண்டதன்றி, "...வேண்டிக்கொள்வேன் தவநெறியே†" என்று பலவிடங்களில் கூறியதன்றி, தம் இறுதித் திரு அஞ்சைக்களப் பதிகத்தில் (தலைக்குத் தலை மாலை 7-4) தனது வாழ்க்கையை அறுத்திட வேண்டும் என்னும் குறிப் புடன் பாடியுள்ளார் என்பதை, "...அவனியில் விழுந் தெழுந்தலைப்புறு மனை வாழ்க்கை சரியவே தலைக்குத்தலை

---

*வெள்ளானைச் சருக்கம்.

†திருத்துறையூர்ப் பதிகம் (7-13.)

மாலை என்றெடுத்தனர் தமிழ்மாலை" (வெ. ச. 29) என விளம்பப்பட்டுள்ளது. மேலும் இவர் இறைவனையே தோழமையாகக்கொண்டு செயற்கருஞ் செயல்கள் பல வற்றை செய்தவர் ஆதலின் எக்காரியத்தையும் குறுகிய கால அளவில் முடிக்க வல்லவர் என்பதை எவ்வாறு மறுக்க முடியும் ?

(2) இவரது வாழ்நாளில் இவர் மேற்கொண்ட யாத் திரைகளே பெரு நிகழ்ச்சிக்குள்ளானவை. நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தர் பல்லக்கிலும், நாவுக்கரசர் நடையிலும் யாத்திரை செய்துள்ளனர். இவர் இளமையில் அரசாகிய நரசிங்க முனையரையரால் வளர்க்கப்பட்டவராதலால் யானை யேற்றம், குதிரையேற்றம் முதலிய பயிற்சிகளைப் பெற்றிருத் தல் வேண்டும். இவற்றிற்கேற்பவே இவருக்கு 8-வது நாகைக்காரோண யாத்திரையில் குதிரை முதலிய பரிசு களும், இறுதியில் திருக்கயிலைக்குச் செல்ல யானையும் வந் தன. இவ்விதப் பயிற்சியற்றோர்க்கு இவை பொருந்தா. 9-வது பாண்டி நாட்டு யாத்திரையில் அரசாகிய சேரமான் குதிரையில் செல்லும்போது, இவரும் அதற்கு முன் நாகை யில் கிடைத்த குதிரையில் சென்றிருக்க வேண்டும். இவர் பல்லக்கில் சென்றதாய்த் திருத்தொண்டர் புராணத்துள் குறிப்புகள் இல்லை. ஆறுவது யாத்திரையில் திருஒற்றியூரில் கண் இழந்து திரும்பி வந்ததைத் தவிர்த்து மற்ற யாத் திரைகளைப் பெரும்பாலும் குதிரை முதலிய ஊர்திகளில் தான் செய்திருப்பார். அரச கோலத்துடனும் திருமணக் கோலத்துடனும் விளங்கியவர் ஆதலின் பெரும் யாத்திரை களை நடந்து செய்திருக்கமாட்டார்.

(3) என்றாலும் நடந்து செல்வதற்கும் மிக்க உடல் வலி உள்ளவர். "...உள்ளக் களிப்பினோடும் வென்றி அடல்

விடைபோல்..." (த. பு. 129) என இவரது உடல் வலி கூறப்பட்டுள்ளது. இன்னும் இவரே தன்னை

"...மல்லின்மல்குதிரள் தோள்" (*7-18-10)
"...மலைமலிந்த தோளூரன்" (7-30-10)
"...திருமருவும் திரள் தோளான்" (7-73-11)
"...மதயானை நாவலாரூரன்" (7-40-11)

எனத் தம்பதிகத்துள் தம் உடல் வலிவு பற்றிக் கூறுகின்றார்.

(4) ஆறுவது தொண்டை நாட்டு யாத்திரையில் திருக்கழுக் குன்றத்தில் இருந்து திருக்கச்சூர் ஆலக்கோயிலை அடைந்தார். ஆனால் இவரது பரிசனங்கள் வரக் காலந் தாழ்த்தமையால் இவருக்குப் பசிவர, அதனை இறைவன் பலி ஏற்றுவந்து தீர்த்துள்ளார். (ஏ. பு. 175-180.) ஆதலால் இவர்தம் பரிசனங்களுக்கு முன் இவர் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றுள்ளார் எனின் அவர்களைவிட (நடையில் அல்லது வேறு வகையில்) விரைந்து செல்பவர் என்பது தெளிவாகின்றதல்லவா ?

(5) மேலும் இவர் யாத்திரையின் இடையில் சம்பந்தர், அப்பரைப்போன்று வழியில் உள்ள தலங்கள் பலவற்றையும் தரிசித்துக் (ஆரூர், திரு ஒற்றியூரைத் தவிர) தங்கிப்போன குறிப்புகள் இல்லை. ஆனால் தாம் குறித்துச் சென்ற தலங்களைத் தவிர்த்து இடையில் உள்ள பல தலங்களையும் தரிசியாது கூட சென்றுள்ளார் என்பதற்குச் சான்றுகள் உள. அவ்வாறு இவர் செல்லும்போது இறைவன் இவரைப் பலவிடங்களில் அதாவது திருஆலம் பொழிலில் இருந்து திருமழபாடிக்கும் (ஏ. பு. 71 - 74);

*முதல் எண் திருமுறை எண். இரண்டாம் எண் பதிக எண். மூன்றாம் எண் பாடல் எண்.

திருமுதுகுன்றத்துக்குச் செல்லும்போது, திருக்கூடலையாற்றூருக்கும் (ஏ. பு. 101-104); மலைநாட்டிலிருந்து திருவாரூர் திரும்புகையில் திருமுருகன்பூண்டிக்கும் (க. பு. 164-171) *வழிமறித்து வலிய அழைத்துச் சென்று பாடச் செய்துள்ளார்.

(6) இவ்வாறு தாம் குறித்துச் சென்ற தலங்களில் தம் முக்கியக் குறிக்கோள் நிறைவேறியபின் உடன் தம் இருப்பிடமாகிய திருவாரூரினை நினைந்து விரைவில் திரும்பியுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள 2, 3, 4, 7, 8 யாத்திரைகளை நோக்க இது நன்கு விளங்கும்.

திருஒற்றியூரில் திருவாரூர் வசந்தத்தின் நினைவுவர (ஏ. பு. 270) உடன் திருவாரூரை நினைந்து "எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" (7-51-4) எனப்பாடி சங்கிலிக்குத்தான் செய்த சத்தியத்தையும் மறந்து† புறப்பட்டுக் கண்களை இழக்கின்றார். பின் இவ்வாறு வரும்போது இடையில் திருக்கச்சி ஏகம்பத்தில் திருவாரூரை நினைந்து "திருவாரூர்புக்கு எந்தை பிரானாரை என்று கொல் எய்துவதே" (7 - 83 - 1) எனப்பாடி நினைந்துருகுகின்றார். பின்னர் பத்தாம் யாத்திரையில் சேரமானுடன் திரு அஞ்சைக்களத்தில் இருக்கும்போது, "ஆரூரானை மறக்கலும் ஆமே" எனப் பாடி உடன் புறப்படுகின்றார். ஆதலால் இவர் திருவாரூர் நினைவால் வெளியில் செல்லும் தலங்களில் அதிகமாய்த் தங்காது விரைந்து வந்துள்ளார் என்பது தெரிகிறது. தம் பிறந்த ஊராகிய திருநாவலூருக்குக் கூட முதல் யாத்திரையைத் தொடங்கிய

*எவ்விதங்களில் அழைத்துச் சென்றார் என்னும் விவரத்தைத் திருத்தொண்டர் புராணத்தில் காண்க.

†"காரிகை காரணமாக ஆரூரைம் மறத்தற்கரியானை" (7 - 55 - 11) என இவர் கூறுகின்றார்.

பின் 6வது தொண்டைநாட்டு யாத்திரையில் ஒருமுறை தான் அவ்வூர் சென்றுள்ளார் (ஏ. பு. 168-171) என்பதும் குறிப்பிடத் தக்கது.

(7) இறுதியாக இவர் யாத்திரையில் மிக்க விரைவு கொண்டு சென்றவர் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு மிகச் சிறந்ததாக விளங்குகிறது.

இவர் சிதம்பரத்தை தரிசித்த தடவைகள் மூன்று.

(1) திருவெண்ணெய் நல்லூரில் இருந்து திருவாரூருக்கு முதன் முதல் வரும்போது (த. பு. 102-109.)

(2) ஐந்தாம் யாத்திரையில் பேரூரைத் தரிசித்துப் பின் அக்கோலத்தைக் கண்டபோது (ஏ. பு. 111-116.)

(3) ஆறும் யாத்திரையில் தொண்டைநாட்டை நோக்கிச் செல்லும்போது குருகாவூரில் இறைவனால் பொதிசோறு அளிக்கப்பெற்ற பின் (ஏ. பு. 155 - 163.)

இம்மூன்று தடவைகளில் ஏதோ ஓர் முறை இவர் சிதம்பரத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தபோது தான் சேரமானுக்குத் தம் நித்திய பூசையில் வழக்கம்போல் கேட்கப்பெறும் திருச்சிலம்பொலி கேட்கப் பெறவில்லை. அதன் காரணத்தை சேரமான் அறிய முயன்றபோது திருச்சிற்றம்பலவர்

"...... ....வன்றொண்ட
ஞென்று முணர்வா னமைப்போற்றி யுரைசேர்பதிகம் பாடுதலா
னின்று கேட்டுவரத் தாழ்ந்தோமென் றூரவரை நினைப்பிப்பார்"
(க. பு. 44)

என விண்மொழியாய்க் கூறப் பின் இவர் சுந்தரரின் பெருமையை உணர்ந்து அவரையும் தில்லையையும் காணத் தம் பரிசனங்களுடன் புறப்பட்டார்.

இவ்வாறு புறப்பட்டவர் முதலில் தில்லைக்கு வந்து கூத்தரைக் கும்பிட்டுப் பொன்வண்ணத்தந்தாதி பாடி

அங்கு தங்கிப் பின் திருவாரூர் வந்தணைந்து வள்ளல் வேந்தராகிய இறைவனைத் தரிசித்து நம்பியாரூரரைக் கண்டு நட்புக்கொண்டார்.

இத்திருச்சிலம்பொலி காலந் தாழ்த்துச் சேரமானுக்குக் கேட்டது சுந்தரரது எம்முறைத் தரிசனத்தின் போது இருக்கக்கூடும் என்பது விளக்கப்பெறவில்லை.

தில்லைக்குள்ள இவரது ஒரே பதிகம் " மடித்தாடும் அடிமை..." (7 - 90) என்பதாகும். இது இரண்டாமுறை தரிசித்தபோது பாடியது.

"......பேரூரிற் கண்டநிலை சிறப்பித்துத் தனிக்கூத்தென்று
நடிப்பானை நாமனமே பெற்றவா றெனுங்களிப்பா னயந்துபாடி"
(ஏ. பு. 115)

எனப்பட்டுள்ளதால் இப்பாடல்தான் சேரமானுக்குத் திருச்சிலம்பொலி கேட்காமல் தடைசெய்திருக்கக் கூடும். மற்ற முதல், மூன்றும் முறைகளில் பாடிய பதிகங்கள் இல்லை. ஒரு சமயம் பாடியன மறைந்துமிருக்கலாம்.

இவ்வாறு இரண்டாமுறை தில்லையை தரிசித்துப் பாடியபின் சுந்தரர் சேரமானைச் சந்திப்பதற்குள் செய்த யாத்திரைகளாவன :—

(1) தில்லையில் இருந்து ஆரூருக்கு வந்து மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை திருவாரூர்க் குளத்தில் எடுத்தது (ஏ. பு. 116 - 136.)

(2) பின் ஆறுவது பெரிய யாத்திரையைத் தொடங்கி மூன்றும் முறை தில்லையைத் தரிசித்துக் கொண்டு சென்று திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து வாழ்ந்திருந்து கண் இழந்து ஆரூர் வந்தது. (ஏ. பு. 142-302.)

(3) பின் திருப்புன்கூர் சென்று ஏயர்கோனை நட்பு கொண்டு மீண்டது. (ஏ. பு. 395-407.)

(4) பின் நாகை சென்று பரிசுகள் பெற்று மீண்டது. (க. பு. 63.)

(மூன்றுமுறை தில்லைத் தரிசனத்தின் போது திருச் சிலம்பொலி கேட்கத் தடைப்பட்டிருப்பினும் பின் மேற் கண்ட 2, 3, 4 சம்பவங்கள் இருவரும் சந்திப்பதற்குள் நடந்திருக்கவேண்டும்.)

இவ்வாறு இவரது இல்வாழ்க்கையின் சிறந்த பகுதி யைச் சேரமான் திருவஞ்சைக் களத்தில் இருந்து தில்லை வழியாய் ஆரூர் வருவதன் முன் (க. பு. 46 - 62) கழித் துள்ளார் எனின் இவர் எவ்வளவு விரைவுடன் யாத்திரை யையும் இல்வாழ்க்கையையும் நடத்தியிருக்க வேண்டுமென் பது புலனாகின்றது.

எனவே இவரது அருள்வாழ்க்கை முழுவதும் சுமார் மூன்றாண்டு கால அளவில் முடிந்திருக்கலாமென்பதைத் திண்ணமாய் நம்பலாம்.

——

'தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை'

வித்துவான் - பண்டிதர் - திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (Hons.), B.O.L.

(மலர் 24, இதழ் 3, பக்கம் 109இன் தொடர்ச்சி)

ஆகம வழக்கு

வேதங்களிலும் சிறந்தனவெனத் திருமூலர், மாணிக்க வாசகர், அருணந்தி சிவனார் முதலிய சிவானுபூதிச் செல்வர் கள் போற்றிய சைவாகமங்களை இழித்துரைக்கும் கூற்றுக் கள் உபநிடதங்களுக்குப் பின் தோன்றிய வராகபுராணம், சூதசங்கிதை, பிரம்ம வைவர்த்த புராணம், பராசர உப புராணம் முதலிய வடமொழி நூல்களிற் காணப்படுகின்

றன. வேதநெறியிலே வழுவிய மக்களுக்கே ஆகமங்கள் கூறப்பட்டனவென்றும், அவை வேதங்களுக்கு விரோத மானவை என்றும் உரைக்கின்றன.

இக்கருத்துக்களை மறுத்து வேதங்களுக்கும் ஆகமங் களுக்கும் விரோதமில்லை எனவும் ஆகமங்களே வேதங்களி லுஞ் சிறந்தன எனவும் வாயவ்விய சங்கிதை, சிதம்பர, அரு ணாசல மான்மியங்கள் முதலியன கூறுகின்றன. தாமே சிறந்தன என்று தம்மைப் போற்றுங் குறிப்புக்களும் ஆக மங்களிலே காணப்படுகின்றன.

தமிழருடைய கொள்கைகளைக்கொண்ட ஆகமங்களை வைதிக நெறியினர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இஃது அவற்றை வைதிக நூல்களோடு சேர்த்துவிட வேண்டு மென்று முயற்சித்தவர்களுக்கு இடையூறாகவிருந்தது. இத னால் அவர்களுடைய மறுப்பை நீக்குவதற்கும் வேதங்களை யும் ஆகமங்களையும் ஓரினத்தனவாகச் செய்வதற்கும் இவர் கள் முயன்றனர். ஆகமங்களின் சிறப்பினை விளக்கி நூல் கள் எழுதினர். ஆகமங்களை வேதமயமாக்குவதற்கு மிகுதி கூறும் கட்டுப்பாடுகளை எல்லாம் அவற்றுட் புகுத்தினர், எனினும் உண்மை இன்னும் மறையவில்லை. திருமூலர் காலத்திலும் அருணந்தி சிவனார் காலத்திலும் இப்பொழு தும் வேதங்கள் பொது நூல்கள் என்றும் தமிழர்கண்ட சைவாகமங்கள் சிறப்பு நூல்கள் என்றுமே கொள்ளப்படு கின்றன.

சிவநெறிச் சிதைவு

வேதங்களும் அவற்றின் வழி நூல்களும் இப் பொழுதும் நிலைத்து நிற்கவும் ஆகமங்கள் பல அழிந்துபோனதற்குக் காரணம் யாது? நீரும் செல்லும் மாத்திரமல்ல, அவற்றை ஏற்றுக் கொள்ளாத சில

ருடைய முயற்சியுமேயாகும். மறைகளிலும் பார்க்க ஆகமங்கள் சிறந்தன என்பதும் மறைகளால் இறைவனை அறிய முடியாதென்பதும், ஆகமமாகி நின்றண்ணிப்ப வன் சிவன் என்பதும் இவைபோன்ற பிற கொள்கை களும் மாணிக்கவாசகர் காலத்தில் நிலைபெற்றிருந்தன. அப்பர் சம்பந்தர் காலத்திலே வேதநெறியைச் சமண பௌத்த நெறிகள் வலியுடன் தாக்கின படியால் வேதநெறி இந்த நெறிகளிலுஞ் சிறந்ததென அவர்கள் போற்றினார்கள் என்றுமுன்னர்க் கூறியுள்ளேன். சிலருடையவேதநெறிக்கும் வேதாந்தத் தெளிவாம் சித்தாந்த நெறிக்கும் அக்காலத்தில் முரண்பாடு இருந்ததென்பதற்கும் முத்தமிழ் நெறியைக் குறைத்து வேதநெறியைப் பாராட்டும் முயற்சிகள் பல இருந்தன என்பதற்கும் அம்முயற்சிகளை அவர்கள் நீக்கினார் கள் என்பதற்கும் அவர்களுடைய தேவாரங்களிலே உள்ள சான்றுகள் பல முன்னர்க் காட்டப்பட்டன. “ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்” என்றும், “நான்மறையும் முத் தமிழுமாயினானை” என்றும் “ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயனறிகிலா” என்றும், பிரித்து ஒற்றுமைப்படுத்துங் கூற் றுக்களையும் காண்க. மாணிக்கவாசகர் காலத்திலிருந்த, தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என் னுங் கொள்கை மாற வடநாடுடைய உருத்திரனே தமிழ் நாட்டவர்க்கும் இறைவன் எனும் கொள்கையும் தலைகாட் டத் தொடங்கிற்று.

தமிழ்மொழித் தாழ்வு

தமிழர் கண்ட சிவநெறியை மாத்திரமா! தமிழ்மொழி யினையும் குறைத்துச் சிதைக்கும் முயற்சியினையும் சிலர் மேற்கொண்டதை யாரறியார்? இதை அறிவித்தற்கு மணிப் பிரவாள நடையும் கிரந்த லிபியும் மாத்திரம் போதும். வட

மொழியே தமிழிலுஞ் சிறந்தது என்றும், அதுதான் தேவ பாடை என்றும், வடமொழியிலிருந்தே தமிழ் தோன்றிய தென்றும் கூறினார்கள். தமிழ்ப் புலவர்களையும் தமிழரசர் களையுங்கூட நம்பச் செய்தார்கள். "தேவபாடை யினிக் கதை செய்தவர் மூவரானவர்" என்னுங் கம்பர் வாக்கே அக்கால நிலையை நன்கு காட்டுகிறது.

"அன்றியுந் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே ஆயினுந் தனித்தமி முண்டோ
ஐந்தெழுத் தாலொரு பாடை யென்று
அறையவு நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே யறிக ;
வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினும்
இலக்கண மொன்றே என்றே எண்ணுக"

என்பதைக் கேட்டால் இப்பொழுது எவரும் நகைப்பர் அன்றோ! அக்காலத்திலிருந்த தமிழ்ப் பேரறிஞர்களே இவ்வளவு தூரம் மயங்கினார்கள் எனின் வடமொழி மோகத்தைப் பற்றி இன்னுங் கூறவேண்டுமா? இந்த மோகத் தைக் குறைப்பதற்காக வன்றோ வடமொழி தென்மொழி களை நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவர் "வடமொழி யைப்பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாந் தென்மொழி யைக் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்" என்று கூறி இருமொழியினையும் சமப்படுத்தினார்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டுவரை காஞ்சியிலிருந்தாண்ட பல்லவ அரசர்கள் வடமொழியினையே மிக ஆதரித்தார்கள். ஆரியப் புலவர் களே அவர்களுடைய சபையினை அலங்கரித்தார்கள். கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றும் நூற்றாண்டுவரை ஆண்ட இடைக்காலச் சோழ அரசர்கள்கூட வேதப் பாட சாலைகளுக்கும் ஸ்மிருதி வியாகரணம் மீமாம்சை முதலியன

வற்றைக் கற்பித்த பாடசாலைகளுக்கும் பணமும் நிலமுங் கொடுத்து உதவினர்களென்பது சரித்திரங் கூறுஞ் செய்தியாகும். இவ்வாறு கலாசாலைகள் வாயிலாகத் தமிழ்க் கல்வியையும் வளர்ப்பதற்கு இவர்கள் முயற்சித்தார்கள் என்பதற்கு ஒருசான்றுமில்லை. இராசராசன் தன் தாய்மொழியை மறந்து சமஸ்கிருதத்திலே அதிக மோகங்கொண்டு அதனை உயர்வுபடுத்தியதைப் பொறுக்க முடியாது அவன் தாயார் அவனைக் கடிந்து உரைத்தார். இவற்றின் விபரங்களைப் பல்லவ சோழர் சரித்திரங்களிற் காண்க.

ஆகமம் அணிப்பது

இனி, ஆகமம் எனுஞ் சொல்லின் பொருளினை ஆராய்ந்து ஆகம சீலர் யாரென்றும் பார்ப்போம். ஆகமம் என்பது ஆப்த வாக்கியம் என்றும், ஆப்தரிடமிருந்து வந்தது என்றும் பொருள் படும் என்பர். மேலும் ஆ, க, ம, எனும் மூன்றெழுத்தும் முறையே பாசம், பசு, பதி எனும் பொருள்களைத் தருதலால் ஆகமம் முப்பொருளையுமுணர்த்தும் நூலென்பதைக் குறிக்கிறது என்றும், ஆ, க, ம என்பன முறையே சிவஞானம், மோட்சம், மலநாசம் என்பனவற்றை உணர்த்துவதால் மலத்தைக் கெடுத்துச் சிவஞானத்தைக் கொடுத்து முத்தியளிக்கும் நூலென்பதைப் புலப்படுத்துகிறதென்றுங் கூறுவர். "ஆகமம் ஞானம்" என்று பிங்கலந்தை கூறிற்று. இவற்றைவிடுத்து மணிவாசகர் கூறுங் கருத்தை நாம் போற்றி ஏற்றுக்கொள்வோம். "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" என்று கடவுளை வாழ்த்தும்பொழுது ஆகமம் அண்ணிப்பது என்று மிகத் தெளிவாக அவர் கூறியுளர். அண்ணிப்பது என்றால் அணுகச்செய்வது என்பது கருத்து. ஆகவே ஆகமம் கடவுளோடு உயிர்களை அணுகச்செய்வது, கிட்டச்செய்வது, இரண்டறக்

கலக்கச் செய்வது என்க. உயிர்களைக் கடவுளோடு சேரச் செய்வதற்காகவே, ஆகமங்கள் பதி பசு பாச இயல்புகளையும் பசுக்கள் பாசத்தை நீக்குதற்கு வேண்டிய சரியை கிரியை முதலிய படிகளையும் எடுத்துரைத்தன. இந்தப்படிகள் எல்லாம் இறைவனோடு உயிர்களை அணுகச் செய்வதற்குக் காரணமான அன்பினை உண்டாக்குதற்கு வகுக்கப்பட்டனவேயன்றி இக்காலத்திலே சிலர் கருதுவதுபோல் சாதி பற்றிய உயர்வு தாழ்வுகளையும் அகங்காரத்தையும் போட்டி பொறாமைகளையும் உண்டாக்குவதற்கன்று.

"மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற்கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மானால் யார்க்கும்
முனமொரு தெய்வமெங்குஞ் செயற்கு முன்னிலை யாமன்றே"

என்பதையும் உணர்க. (தொடரும்)

ஐயவினு

(முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

திருவாசகத்துள், குயிற்பத்தின் மூன்றாவது திருப்பாடலாகிய

நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவும்
கோல அழகிற் றிகழுங் கோடிமங்கை யுள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திருவுத்தர கோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனைவரக் கூவாய்.

என்பதிற் குறித்த தலவாலாற்றுக் குறிப்பு வெளிப்பட்டிலது. திருவுத்தாகோசமங்கைப் புராணத்திலோ வேறெதிலோ இது விளங்குமேல், அதனைத் தெரிவித்துதவச் சைவப்புலவரை வேண்டுகின்றேன்.

ம தி ப் பு ரை

வாழ்க்கையோ கவலேயோ - ஒரு கவிதைக் கதை - கோவை நிலேயப் பதிப்பகம். விலே ரூ. 1—12—0.

“வாழ்க்கையோ கவலேயோ”:— என்னும் ஒரு கற்பனேக் கவிதையைக் கண்ணுற்றேன், அது தமிழின் இனிமையையும் எளிமையையும் இளேஞர் முதியர் கற்ருர் கல்லார் எல்லாருஞ் சுவைக்கும் வண்ணம் அமைந்து, காலத்திற்கு வேண்டிய கருத்தெல்லாம் கண்ணுடிபோற் காட்டுகிறன்றது; இந்நாள் மக்களேத் திருத்தும் என்று நம்புகின்றேன்.

‘ வறுமையும் செம்மையும் மானுடன் மட்டும்
பெறுதலும் ஏஞே ? பெறவிழைந் தனஞே ?’

‘ எத்தனே யுழைத்தும் எத்தனே வருந்தியும்
அத்தனேக் காறுதல் அடைதலும் இலனே ’

‘ ஒன்றினேப் புரக்கும் உறுதியும் இல்லார்
கன்றுகள் மூன்றைக் காப்பதும் எவ்வணம் ’

என்பவை போன்றன வாழ்க்கையை யுணர்த்திக் கவலேயைக் காட்டி, அதைப்போக்கி நல்வாழ்வு நாடச் செய்யும்.

‘ சினமும் மிக்குச் சீறி எறின்
மனமும் மாறும் மதிப்புங் குறையும் ’

என்பது போன்ற நீதிகள் நிறைந்து கிடக்கின்றன. இத்தகு நவீனகவிகள் இந்நாளில் நாட்டில், பல்கித் திருத்தம் செய்க.

—முத்து. சு. மா.

15, 22 - 3 - 51. பேரூர் பட்டீசர் பங்குனி யுத்தாத் திருவிழாச் சொற்பொழிவுகள் - குன்றக்குடி ஆதீனம் சின்னப்பட்டம் தெய்வசிகாமணி அருணுசலதேசிக சுவாமிகள் துவக்கிவைத்தார்கள். பல பெரியார்கள் அரிய சொற்பொழிவுகளே நிகழ்த்திஞர்கள். சுவாமிகளுக்கு வரவேற்புப் பாமாலே அளிக்கப்பட்டது.

18 - 3 - 51. உதகமண்டலம் காந்தல் தட்சிணுமூர்த்தி மடாலயத்தில் ஓம்பிரகாச சுவாமிகளின் 78வது ஜயந்தி நடைபெற்றது. நமது ஆசிரியர் தலேமையில் திரு. தாவே, பிரசாத், நாமக்கல் கவிஞர் முதலானவர்கள் சொற்பொழிவு ஆற்றிஞர்கள். ஏழைகளுக்கு பாமான்னம் அளிக்கப்பட்டது.

திருவெண்காடு தேவத்தானத்தில் தேவாரப் பாடசாலை நிறுவப்பெறும். மாணவர்களுக்கு இலவசப் படிப்பும் உணவும் தரப்படும். மாணவர்கள் 12 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும். இனிய குரலுடைய தேர்ச்சி பெற்ற தேவார ஆசிரியரும் தேவை. சம்பளம் மாதம் ரூ.50 அறக்காப்பாளர் அவர்களுக்கு எழுதிக்கொள்ளுக.

* * * *

விருத்தாசலம் ஆலயத்தில் முறைப்படி நடக்கும் வார வழிபாட்டில் 16 - 3 - 51 மாலை 7 மணிக்குத் திருவாளர் உ. சா. இரத்தினம் பிள்ளை அவர்கள் 'எறிபத்த நாயனார் அன்பு' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

* * * *

14 - 3 - 51 முதல் 23 - 3 - 51 வரை நடந்த வாலாஜாநகர் ஏகம்பப்பெருமான் பங்குனி உத்திர விழாவின் போது தினந்தோறும் மாலை 6-30 மணிக்குச் சமய சொற்பொழிவுகள் நடைபெற்றன.

* * * *

24, 25-3-51. பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தின் 41-ம் ஆண்டு விழா தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. பல அறிஞர்கள் பேசினார்கள்.

* * * *

1, 2-4-51. திருவையாறு ஐயாவுடையார் கோயிலில் திருமுறை மாநாடு திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

* * * *

11 - 4 - 1951. புதன் காலை 9 மணிக்கு மஞ்சட் கொல்லை குமரகோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 8 - 4 - 51 முதல் 11 - 4 - 51 வரை சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

சைவப் புலவர் தேர்வு

1951, 1952, 1953 ஆண்டுகளின் பாடதிட்டம்

I. இலக்கியப் பகுதி

1. திருக்குறள்—அறத்துப்பால் (அதிகாரம் 1 முதல் 38 வரையில்).

2. ஒன்பதாம் திருமுறை—(திருவிசைப்பா, திருப்பல்லாண்டு).

3. திருமந்திரம்: முதல் தந்திரம். உபதேசம் 30 பாக்கள்.

4. பதினோராம் திருமுறை—(திருமுருகாற்றுப்படை, அற்புதத் திருவந்தாதி).

5. பெரிய புராணம்—காரைக்காலம்மையார் சரித்திரம்.

II. சாத்திரப் பகுதி

1. சிவஞானபோதம்.

2. சிவஞானசித்தியார்—சுபக்கம்.

3. திருக்களிற்றுப்படியார்.

4. திருவுந்தியார்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.